

# விடுதலை

திக்குவல்லை கமால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திக்குவல்லை கமால் - நூல்கள்

★ கோடையும் வரம்புகளை உடைக்கும் - 1984
(சிறுகதைகள்)

★ குருட்டு வெளிச்சம் - 1993
(சிறுகதைகள்)

★ ஒளி பரவுகிறது - 1995
(நாவல்)

★ விடுதலை - 1996
(சிறுகதைகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை

## திக்குவல்லை கமால்

பேசும் பேனா வெளியீடு

5,1/20, முதலாம் மாடி,
சுப்பர் மார்க்கட்,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு-13.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் இலங்கை தேசிய நூலக சேவைகள் சபையின் உதவியுடன் அச்சிடப்பட்டுள்ளது. இதன் உள்ளடக்கம் சபையின் கருத்துக்களை பிரதிபலிக்க மாட்டாது என்பதை கவனத்திற் கொள்ளவும்.

**விடுதலை**

*(சிறுகதைகள்)*


உரிமை : திக்குவல்லை கமால்

முதற் பதிப்பு : மார்ச், 1996

அட்டைப்படம் : எம். ரி. எம் ஹுஸைன் (ஹுனா)

அச்சுப்பதிப்பு : குயிக் கிரா∴பிக்ஸ்


**VIDUTHALAI**

*(Short Stories)*


First Edition : **March - 1996**

Copy Right : **Dikwella Kamal**

ISBN No : **955-95926-0-2**

Cover Disigned by : **M. T. M. Hussain (Hoona)**

Printed by : **Quick Graphics Print**
5 - 1/20, Super Market,
Kotahena,
Colombo -13.
Tel : 432627

Price : **Rs. 60/=**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எனது தாயார்

ஏ. ஏ. ஸித்தி ஆமினா உம்மா

அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறவுகோல்

வழமைபோல் சமூகப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு, யதார்த்தமாக.. இயல்பான பேச்சுமொழியில் இக்கதைகளை எழுத முயன்றுள்ளேன்.

இன்று பொதுவாக சிறுகதைகள் பத்திரிகைகளில் வெளியிடுவதற்காகவே எழுதப்படுகின்றன. ஆனால் இத்தொகுதியில் இடம்பெறும் கதைகள் எங்கும் வெளிவந்தனவல்ல. ஆயினும், அவ்வப்போது எழுதப்பட்டனவாகும்.

இத்தொகுப்பு ஸ்ரீலங்கா தேசிய நூலக சேவைகள் சபையின் புத்தக வெளியீட்டு உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வெளிவருகிறது.

தேசிய நூலக சேவைகள் சபையினர் நன்றிக்குரியவர்களாவர்.

இலக்கிய தாகமே இமயதாகம்

திக்குவல்லை கமால்

191/B- அட்டுலுகம,
பண்டாரகம.
(இலங்கை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதவுகள்


★ மதிப்புக்குரிய மடமைகள் 1

★ மறுவாழ்வு 7

★ ஜங்கிள் காக்கி 15

★ சாப்பாடு 21

★ விடுதலை 29

★ கிழட்டுக் குதிரை 35

★ நேசம் மறவா நெஞ்சம் 43

★ ஒரு காலைப் பொழுதின் நகர்வு 53

★ படித்த மனைவி 61

★ வற்றாத ஊற்று 69

★ ஆட்டம் 77




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புக்குரிய மடமைகள்

"சாச்சீ ..... சாச்சீ ஒங்கள வரச்செென்ன"-டி.வீ. யில் சிறுவர் நிகழ்ச்சி பார்த்துக்கொண்டிருந்த ரிம்ஸான் அவளைக் கண்டதும் இப்பொழுதுதான் ஞாபகம் வந்தவனாகச் சொன்னான்.

"எனம்பன் இவளவு நேரமும் செல்லல்ல?"- அரைமணி நேரத்துக்கு முன்பிருந்தே அவனை அவள் அங்கு காண்பதால் சற்றே கோபத்தோடு கேட்டாள்.

"மறந்து பெய்த்த சாச்சீ.."-பதில் சொல்லவும் அவகாச மில்லாதபடி கார்டூன் நிகழ்ச்சியில் அவன் கவனம் லயித்திருந் தது.

"சின்னப்புள்ளகளுக்கு வெளாட்டுப் புத்திதான்" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதுக்குள் கருவியபடி, அவசரமாக அங்கிருந்து வீட்டுக்கு நடந்தாள் நஸீமா.

அவளது வீடு அப்படியொன்றும் அவ்வளவு தூரத்தி லல்ல. அடுத்தடுத்த வளவுகள்தான். ரஹ்மா மாமி வீட்டில் கல்யாணத்துக்கு மாஇடிப்பதாகச் சொல்லியிருந்ததால் அஸருக்குப் பிறகு உதவிக்கு வந்தவள் அவள்.

இந்தக் கெடுபிடிக்குள் அவளது கணவன் வந்திருக் கிறார். இன்று வருவதாக ஏற்கனவே சொல்லியிருக்காததால் அவள் எதிர்பார்க்கவுமில்லை. சொல்லியனுப்பியும் வரவில்லை யே என்ற கோபத்தில் எப்படியெல்லாம் ஏசுவாரோ என்று பயந்தாள் நஸீமா. ஆள் முன்கோபியென்று அவளுக்கு தெரியாதா?

"மாப்பிள வந்து எவளவு நேரமன்.... இப்பவா நீ வார.." குசுனிக்குள்ளால் அவள் புகும்போதே உம்மா கேட்ட கேள்வி இது.

"ரிம்ஸான் இப்பதான்வா சென்ன.. என்னக் கண்டாப் பொறகுதான் அவனுக்கு நெனவு வந்த" இப்படி அவள் சொன்னபோதும் நெஞ்சப் பதட்டம் குறைந்துவிடவில்லை.

"கோப்பி ஊத்திக் குடுத்த... அன்ன அங்கல எறங்கிப் போன பள்ளிக்கோ தெரிய"

உம்மா சொன்னதை காதில் வாங்கிக்கொண்டே காம் பராவுக்குள் நுழைந்தாள். அவர் அங்கே இருக்கவில்லை. கோப்பிக் கோப்பை மூடியபடி அப்படியே மேசையில் கிடந்தது. அதனை மெல்லத் திறந்து பார்த்தபோது அவளது இரத்த ஓட்டம் இரட்டிப்பாகிவிட்டது.

டக்கென்று திரும்பி அலுமாரியைத் திறந்தாள் நஸீமா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே கழுவி அயன் பிடித்து வைத்திருந்த நாலைந்து சேட், ஸாரங்களையும் காணவில்லை. மாப்பிள்ளை கோபித்துக் கொண்டு போயிருந்தார் என்பதற்கு இதைவிட அத்தாட்சி அவளுக்குத் தேவையில்லை. உம்மா வந்து எட்டிப் பார்ப்பதற்கிடையில் குளிர்ந்து போயிருந்த கோப்பிக் கோப்பையை மடக்மடக்கென்று குடித்தாள். இந்தச் சங்கதி தனக்குள் மட்டுமே இருந்து விடட்டுமென்று கருதினாள் அவள்.

நஸீமாவுக்கு திருமணம் நடைபெற்று ஆறுமாதங்கள் தான். அவளது கணவன் பக்கத்து ஊரவர். நாளாந்தம் தேடித்தின்னும் பிழைப்பு. கஷ்டப்பட்டு எந்த வேலையையும் செய்யப்பக்குவப்பட்ட உடல்.

வாரம் ஒரு தடவையோ இரண்டு தடவையோ வந்து, ஒருநாளோ ஓர் இரவோ சந்தோஷமாக இருந்துவிட்டுப் போவதையே பழக்கமாக்கிக் கொண்டுமுள்ளவர்.

அவ்வளவு தூரம் படித்தவரல்ல. அதனாலோ என்னவோ சில கொள்கைகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் அடிமையாகியிருந்தார். நஸீமா படிப்பு வாசமுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவள். சிலநேரம் தன்கணவனின் செயல்கள் அவளுக்கு வியப்பாக இருக்கும். பல சந்தர்ப்பங்களில் அதனை அவள் தன்னோடு மட்டுமே தர்க்கித்துக்கொள்வாள்.

ஒருநாள்.....

காலை எழுந்து குளித்துச் சாப்பிட்டுவிட்டு போகத் தயாரானார். ஒப்பந்த அடிப்படையில் வீடுகட்டும் வேலையொன்று இருப்பதாகவும் அதில் தானும் வேலையாளாகச் சேர்ந்துள்ளதாகவும் சொன்னார். அதனால் சில நாட்கள் சுணங்க வேண்டியிருப்பதையும் என்றாலும் வரும்படி கூடுதலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கக் கிடைக்குமென்றும் தெரிவித்து விட்டுப் புறப்பட்டார்.

பிரிவு கொஞ்சம் நீண்டதென்ற சோகத்தோடு நஸீமா வாயிலிலிருந்து உள்ளே திரும்பியபோது அந்தக் காலடி யோசையைக் கேட்டு மீண்டும் பார்த்தாள். அங்கே அவளது கணவன்..!

"எனத்தியன் வெச்சிட்டுப் போன?"- அவள் கேட்டாள். முகத்தில் கடும் கோபத்தோடு கைப்பார்ஸலை அப்படியே மேசையில் போட்டுவிட்டு அமர்ந்து கொண்டார்.

"ரெண்டு கைலேம் வெறும்பாளியோட முன்னுக் கொத்தன் வந்த. இனி எப்பிடியன் போற..ம் நாளக்கித்தான் பொகோணும்"- இடையில் ஏற்பட்ட தடங்களை இப்படி விபரித்தார்.

பும்மென்று வந்த சிரிப்பை பற்களாலும் உதடுகளாலும் கடித்து விழுங்கிக்கொண்டாள்.

"ம்-வந்த மனிசன இன்னேம் காணல்ல-" என்றவாறு அவளது உம்மா வந்து எட்டிப்பார்த்தாள்.

"அவரு எங்கியாலும் போற வழீல எறங்கொண்டும்-" விஷயத்தை மிகவும் இலேசாகக் காட்டிக்கொண்டாள் நஸீமா.

அடுத்தநாள் மாலை...

இன்னும் போன மச்சான் திரும்பி வரவில்லை. எப்படி வருவார்? வந்த மனிதனை வரவேற்க சொல்லியனுப்பியும் மனைவி வராமலிருந்தால்.....

நஸீமாவுக்கு நேற்று இரவு தூக்கமே வரவில்லை. மூன்று வேளையும் அடுத்தவர்களை ஏமாற்றுவதற்காகத்தான் ஏதோ சாப்பிட்டாள். புத்தியுள்ள மனிதனாக இருந்தால் நடந்ததைப் புரியவைக்க முடியும். இப்பொழுது என்னதான் செய்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்று அவளுக்கு பெரும் போராட்டமாக இருந்தது.

ஒருவேளை அவளோ அல்லது அவள்சார்பில் யாராவதோ போய் மன்னிப்புக் கேட்டால்தான் வருவதென்று பிடிவாதத்தில் நின்றுவிட்டால்........

வெளியில் சொல்லவும் முடியாத ஒரு சங்கடமான நிலை அவளுக்கு!

சிந்தனைச் சிக்கலில் சுழன்றபடி தலை சாய்ந்திருந்தவள் அப்படியே தூங்கிப்போய்விட்டாள்.

"நஸீமா"

யாரோ அழைப்பதுபோலவும் தொடுவது போலவும் ஒருணர்ச்சியில்... கண்மடல்களை விரித்தபோது... அவளெதிரே அவள் கணவன்.

சடக்கெனெழுந்து கண்களைக் கசக்கிக் கொண்டு உற்றுப்பார்த்தாள். சந்தேகமில்லை; அவள் கணவனேதான்.

"ஆ.. இப்பவா வந்த?" ஆவல் நிரம்பி வழிய அவள் கேட்டாள்.

"நீங்க என்ன மன்னிச்சிக்கொளோணும் ஒங்கட மனச நோவிச்சத்துக்கு" அவள் மன்னிப்புக் கேட்கவேண்டிய கட்டத்தில் அவரே இப்படி!

"நீங்க..நீங்க..." என்று அவள் தடுமாறுகையில்......

"இங்க பாருங்க ஏன்டகைய"- என்றவாறு வலக்கையின் புறப்பக்கத்தை புரட்டிக் காட்டினார்.

முழங்கைவரை ஆழமான சிராய்ப்பு ஏற்பட்டு வீங்கிப் போயிருந்தது. அதிலே ஏதோ எண்ணெய்த் தடவலின் மினு மினுப்பு.

"எனத்தியன் நடந்திது"-அவள் பதறிப் போய்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டாள்.

"வெள்ளண குளிக்கப்பெய்த்து அப்பிடியே வழுக்கி புழுந்த...."

"பாத்துக் கேட்டு கால் வெக்கோணேன்"

"நல்ல காலம் கையக்குத்தி தலயத்தப்பவெச்சிக் கொண்ட..ம்..... எல்லம் நீங்க வரங்காட்டிம் நிக்காம பெய்த்து ஒங்கட மனச நோவிச்சதுதான்"

"ம்.. இப்பிடி எண்ண பூசிச் சரிவாரல்ல. தொஸ்தருக்குக் காட்டி மருந்தெடுக்கோணும். நல்ல தகர்வயா ஈக்கும்"

"தேவில்ல ஊட்டில உம்ம ஒடனே பாங்கெட்ட அவிச் சித்தந்த"

நஸீமாவின் தலையிலிருந்த பாரமும் மனதிலிருந்த அழுத்தமும் ஒரேயடியாக எப்படிப் பறந்ததோ?

தன் கணவன் சாதாரணமாக சிந்திப்பவராக இருந் தால், கோபித்துக் கொண்டு போனதையும் வழுக்கி விழுந்த தையும் சம்பந்தப்படுத்தி இப்படி விழுந்தடித்துக் கொண்டு வந்திருக்கமாட்டாரே, என்று நினைத்தபோது மடமைகளையும் சிலநேரங்களில் மதிக்க வேண்டும் போலிருந்தது நஸீமாவுக்கு!

**1988-05-08.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறுவாழ்வு

சுபஹு தொழுதுவிட்டு வந்த ரியாஸா சுற்றுப்புறங்க ளை ஒருமுறை நோட்டமிட்டாள். இது அவளுக்கு சின்னப்பரு வம் முதல் தெரிந்த சூழல்தான் என்றாலும் கடந்த நான்கு மாதமாக அவள் இத்தா இருந்த காரணத்தால் எதிலுமே பிடிப்பில்லாமலிருந்தாள். நேற்றுத் தானே அவளுக்கு விடு தலை கிடைத்தது.

தூரத்தே தெரிந்த பச்சை மரந்தளிர்களை மெல்லிய பனிப்புகார் திரையிட்டிருந்தது. ஆங்காங்கே தெரிந்த வீடுகளி லிருந்தெழுந்த புகை அதனோடு மெல்ல மெல்ல சங்கமித்தது. மனித சந்தடி இன்னும் பிரவகிக்காத நிலையில் உலகமே அமைதியின் மடியில் சயனித்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குடும்பப் பெண் என்ற நிலையிலிருந்த ரியாஸா இப்பொழுது விதவையென்று முத்திரை குத்தப்பட்டுவிட்டாள். மிகவேகமாக சுற்றிச்சுழன்ற கடந்த பதினெட்டு மாதங்களில் எத்தனை ஏற்ற இறக்கங்கள், வெற்றி தோல்விகள்!

பருவப் பூரிப்பில் திருமணத்துக்காகக் காத்திருந்த பலநூறு பெண்களில் அவளும் ஒருத்தி- அப்பொழுது திரு மணப் பேச்சுக்கள் தொடர்வதும் இடையில் முறிவதும்.. பெண் பார்க்க வருவதும் பின்னர் பதிலே இல்லாமல் மௌனத் திரை விழுவதும் சர்வ சாதாரணமான சம்பவங்கள்தான்.

எப்படியாவது ஒரு ஏற்பாட்டைச் செய்து தனது தங்கை யை மணக்கோலத்தில் காண பகீரதப்பிரயத்தனம் செய்தான் அஸ்லம். உம்மா வாப்பா இருந்தாலும்கூட பொறுப்பு என்ன வோ அவன் தலையில்தான்.

அஸ்லமின் நெருங்கிய நண்பன்தான் இர்ஷாத். இதனால் இந்த விவகாரங்களெல்லாம் அவனுக்கும் அணு வணுவாகத் தெரியும். நண்பனின் தங்கையை தன்னுடைய சகோதரியாகவும் அவன் கருதிச் செயற்பட தவறவில்லை. ஒருநாள் அவனே ஒரு ஏற்பாட்டோடு வந்து நின்றான்.

"மசான் அடுத்தூருதான். யாவார விஷயத்தில எனக்கு நல்ல பழக்கம். மிச்சம் நம்பிக்கையானவன். ரியாஸட விஷயமா கதச்ச. நீ எனத்தியன் செல்லிய?"- இப்படி இர்ஷாத் கேட்டபோது அஸ்லம் மெய்மறந்துபோனான்.

"எங்கட விஷயத்துல நீ இவளவு யோசினயா ஈக்கி யதே பெரிய சந்தோஷமாயீக்கி"- கேட்ட கேள்வியை மறந்து அவன் எதையோ சொல்லத் தொடங்கினான்.

"முஹறப்பத்தென்டா, அப்பிடித்தான் எனக்கும் எல்லந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரீந்தானே... நானும் ஒரு முயற்சியெடுத்துப் பார்த்த. ஹைறாகும் போலீக்கி.. எங்களோட ஒத்துப்போற ஆள்தான். நீ எனத்தியன் செல்லிய?"- இர்ஷாத் எதிர்பார்த்து நின்றான்.

"இப்படி எத்தின விஷயம் வந்தன். சரி குடுக்கல் வாங்கலியள் எப்பிடியன்?"- கடந்து சென்ற அனுபவங்களோடு சம்பந்தப்படுத்தி வினாத்தொடுத்தான் அஸ்லம்.

"ஒனக்கு குடுக்கேன்டத்த செல்லு.. நான் அதுக்கேத்த மாதிரி பேசிப்பாக்கியன். நான் செல்லியத்த எப்பிடீம் கேப் பான்"- இர்ஷாத் சற்று அழுத்தமாகவே சொன்னான்.

"இனுமொருக்க தாருசரி வந்து பொண்பாத்திட்டுப் போறத்த மட்டும் ரியாஸ பொறுக்கியல்ல. ஊட்டுக்குள்ள நான் படுகியபாடு எனக்கு மட்டுந்தான் தெரீம்-" தன் மன வேதனையை பிரதிபலித்தான் அஸ்லம்.

அடுத்தடுத்த நாட்களில் இருவருமாகச் சென்று உத் தேச மாப்பிள்ளையை பார்த்தபோது, அனைவருக்கும் பிடித்துப்போய்விட்டது. பேச்சுவார்த்தைகளும் சுமுகமாகவே அமைந்தன. பெண்பார்க்கும் படலத்துக்கு முற்றுப்புள்ளி விழுந் தாயிற்று. இனியென்ன அஸ்லமின் வீடு கல்யாண வீடாக கலகலக்கத் தொடங்கியது. ஒரே மாதத்துக்குள் ரியாஸாவின் கல்யாணம் சிறப்பாக நிறைவேறியது.

ஒரு நல்ல நண்பனின் தொடர்பால் நடந்தேறிய கல் யாணத்தையிட்டு அஸ்லம் வீட்டில் அனைவருமே மகிழ்ந்து போயினர். ரியாஸா ஒரு குடும்பப் பெண்ணாக படிப்படியாக பரிணமித்தாள்.

அவர்களின் மகிழ்ச்சியை உறுதிப்படுத்துமாப்போல் வந்து பிறந்தது ஓர் ஆண் குழந்தை. இனியென்ன கேட்கவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். பெயர் சூட்டு விழாவையே பிரமாதமாக நடாத்தி முடித்தான் ரியாஸாவின் கணவன் கபீர். இப்படிக் கலகலப்பாக அவர்களது வாழ்வுநதி ஓடிக்கொண்டிருந்தது.

ஒருநாள்...

"ரியாஸா... அவசரமாக ஓடரொன்டு கெடச்சீக்கி.. பத்தாயிரம் தேவ .. ஆனா நல்ல நயம் கெடக்கிய... இப்ப எனத்தியன் செய்த?"- தன் மனைவியிடம் ஆலோசனை கேட்டான் கபீர்.

அவள் என்னதான் செய்வாள். யாரிடமாவது கைமாறக் கூடியளவுக்கு .. அதுவும் பத்தாயிரம் ரூபா பெறத்தக்கதாக யார்தான் இருக்கிறார்கள். ஆனால் முதன் முதலாக கணவன் வாய்திறந்து கேட்டிருக்கிறாரே. அவளுக்கு அந்த ஒரு வழி தான் தெரிந்தது.

"நான் கேக்கியென்டா நானாக்கட்டத்தான் கேக்கோணும். அவரும் சின்ன யாவாரம்தானே பண்ணிய. இல்லாத்தத் தெரிஞ்சிக்கொண்டு கேக்கியதும் சரில்ல-" அவள் உண்மையான நிலைபாட்டை வெளிக்காட்டினாள்.

"அப்படியெண்டா பேசாம கையுடோன்டியதான் கைக் கெட்டினது வாய்க்கெட்டல்ல..ம்...-" அவனும் இயலாமை யைப் பகிர்ந்து கொண்டான்.

"ஒரு வழீக்கு. நல்லமென்டாச் செய்யோம். ஏன்ட சவடிய அடவுவெச்சி சல்லி எடுக்கேலும் தானே-" ரொம்ப அதிகமாக சிந்தித்த பின்புதான் அவள் இதனை முன் வைத்தாள்.

அப்படியொரு யோசனையை முன்வைக்காது போனால், கணவனின் அதிருப்திக்கு தான் ஆளாகிவிட நேரிடுமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வெகுவாக பயந்ததினாலேயே அவள் அவ்வாறு சொன்னாள்.

“நல்ல யோசின ரியாஸா. இப்பிடி டைமொன்டுக்கு பொரோசனமாகாட்டி இருந்தும் வேலில்லேன்-” நம்பிக்கை நெய் வார்த்தான் கபீர்.

சவடி கைமாறியது. மூன்று நாளில் மீண்டும் கைக்கு வந்து சேருமென்று உறுதியளித்த சவடி மூன்று மாதமாகியும் வந்து சேரவில்லை. ரியாஸா கலங்கிப்போனாள். எங்கே என்று வீட்டார் கேட்டுவிடமுன் வந்து சேருமென எதிர்பார்த்தது, “எங்கே, எங்கே” என்று எல்லோரும் கேட்டுவிட்ட பின்பும் வந்து சேர்ந்தபாடில்லை.

முன்பென்றால் இரண்டு நாட்களுக்கு மேல் எங்குமே தங்காதவர் இப்பொழுதெல்லாம் வாரக்கணக்கில் வீட்டுக்கு வராமலிருக்கத் தொடங்கினார். இதனால் கபீர் மீது படிப் படியாக சந்தேகக் கொடி படரத் தொடங்கியது. அப்படிப்பட்ட ஒரு நாளில்தான் அவள் கேட்டேவிட்டாள்.

“அந்தச் சவடி.. இப்ப மூனு மாஸமும் பிந்தீட்டெனா” கேட்கவேண்டியதை மிகவும் பணிவாகத்தான் கேட்டாள்.

“இப்பிடித்தான் மனிசனுக்கு கஷ்ட நஷ்டம் வார. நானொன்டும் களவான்டிக்கொணு பொகல்ல... சல்லி கெடச் சொடனே மூண்டு தாரன்” இப்படித் தாறுமாறாக ஏசிவிட்டு வீட்டிலிருந்து வெளியிறங்கினான் கபீர்.

அன்றுபோனவன் மாதங்கள் பல கடந்தும் அந்தப் பக்கத்தை எட்டியும் பார்க்கவில்லை. இடையில் பலதடவை பலபேர் போய்ச் சந்தித்தும் ஒன்றும் சாத்தியமாகவில்லை. அதற்குப் பதிலாக வந்துசேர்ந்த செய்திகளோ பேரிடிபோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்தன. பல சந்தர்ப்பங்களில் சுய உணர்வோடு இருப்ப தில்லை என்றும் தெரியவந்தது.

அதன் இறுதி விளைவு அல்லாஹ் அங்கீகரித்த போதும் அவன் விரும்பாத இடத்துக்கு வந்துதான் முற்றுப் பெற்றது. வேறென்ன தலாக்தான்.

"ரியாஸா.. முக்கியமான விஷயமொண்டு ஓங்களு கிட்டக் கேக்கோணும்"- சுபஹு தொழுதுவிட்டு வந்த அஸ்லம் இப்படிக் கேட்டபோதுதான் அவள் இவ்வுலகுக்கு வந்தாள்.

"எனத்தியன் நானா?" - பெருத்த எதிர்பார்ப்புக்கள் எதுவுமில்லாமல் கேட்டாள் அவள்.

"இத்தா முடிஞ்சிதரனே.. இனுமொரு விஷயம் வந்தீக்கி. ஓங்கட புரியத்த அறியோணும்"- அவன் விடயத்துக்கு வந்தான்.

இன்னொரு திருமணம் பற்றி அவள் கனவுகூடக் காண வில்லை. முதல் திருமணத்தைச் செய்து வைக்க யார் யார் எப்படியெல்லாம் சிரமப்பட்டார்களென்று அவளுக்கு தெரியாதா என்ன?

"இனுமொரு பைணம் ஓங்களியளுக்கு கரச்சல் தார துக்கா"- அவள் சட்டென்று சொன்னாள்.

"இதுக்கு பெரிய செலவொன்டும் தேவப்படுகியல்ல.. அவரே வந்து கேக்கிய... அவங்கட ஊட்டிலேம் புரியமாம்" அஸ்லம் சொல்லிக்கொண்டே சென்றான்.

இப்படிப்பட்ட நல்ல நெஞ்சங்கள் இந்த உலகத்திலும் இருக்கிறார்களா என்று வியந்தாள் அவள். அந்தப் புனிதர் யாரென்று அறிந்து கொள்ள அவளுக்கு ஆவல் மேலிடா மலில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்க தாரயன் செல்லிய?" -ரியாஸா ஆவல் ததும்பக் கேட்டாள்.

"வேற தாரன்.. ஒங்கட கலியாணத்த பேசித்தந்த இர்ஷாத்தான். அவரட கூட்டாளி இப்படி அநியாயம் செஞ்சி போட்டத்த அவருக்கு பொறுக்ககேலாமதான் இந்த முடிவுக்கு வந்தீக்கிய-" வேறு கேள்விகளுக்கு இடம் வைக்காமல் அஸ்லம் சகல விபரங்களையும் சொல்லித் தீர்த்தான்.

"யாஅல்லா-நீதான் போதுமான நாயன்"- அவள் மனம் நிறைய அல்லாஹ்வைப் புகழ்ந்தாள்.

ரியாஸாவின் மறுவாழ்வுக்கான ஆயத்தங்கள் அக் கணமே நிகழ ஆரம்பித்தன.

**1990-11-19**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜங்கிள் காக்கி

வாப்பா என்ற புத்தகத்தின் இறுதி அத்தியாயத்திற்கும் முற்றுப்புள்ளி விழுந்தாயிற்று.

நேற்று மாலை ஐந்துமணிக்கு மௌத்தாகிப்போனார். இன்று மாலை ஐந்துமணிக்கெல்லாம் மையத்து அடக்கம் செய்யப்பட்டுவிட்டது.

அழுகை.. ஒப்பாரி என்று பெரிதாக ஒன்றுமில்லை. சுமார் எண்பதாண்டுகாலம் வாழ்ந்து.... சிலகாலம் நோயிலே விழுந்து .. "ஈமான ஸலாமத்தாக்கு யாஅல்லா" என்ற துஆக்கள் சகிதம் இவ்வுலக ஒட்டுறவை அறுத்து கண்களை இறுக மூடிக்கொண்டார்.

இக்கட்டானதொரு காலகட்டம். இளைஞர் கிளர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் அரசியல் சூதாட்டங்களும் ஏட்டிக்குப் போட்டியாக களேபரப்பட்டு நாளாந்த வாழ்க்கையே அறுந்து தொங்கிய வேளையில்தான், வாப்பாவும் இவ்வுலகத் தொடர்பை அறுத்துக்கொண்டார்.

வாப்பாவுக்கு உம்மா சகோதர சகோதரிகள் யாருமில்லை. ஏழு பிள்ளைகள். ஐந்து மருமக்கள்.

தூரந்தொலைவுக்கு செய்திகள் அனுப்பவும் அவர்களின் வருகைக்காகக் காத்திருக்கவும் அவசியமிருக்கவில்லை.

மௌத்தானபின் அவர் பெயரில் என்ன செய்யலாமென்ற சிந்திப்பு குடும்ப வட்டாரத்துக்குள் பொதுவாக எழும் ஒன்றுதான்.

யாஸீன் கிதாபு அச்சிட்டு விநியோகிப்போம் என்பது முதல் கிணறுகுளமென்ற ஏதாவது கட்டிவைப்போம் என்பது வரை கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு, கடைசியாக இப்போதைக்கு நாற்பதாவது கத்தத்தை கொஞ்சம் சிறப்பாக செய்வோம் என்பதில்தான் வந்துநின்றது.

இவற்றுக்கு அப்பால் வாப்பாவின் பெயரில் என்னால் என்ன செய்ய முடியுமென நான் தன்னந்தனியாக சிந்தித்துப் பார்த்தேன்.

என்னைத்தான் இப்பொழுதெல்லாம் எல்லோரும் எழுத்தாளனென்று சொல்கிறார்கள். அதையும் இதையும் வாசித்து அந்த ஆசையில் கதைகள் எழுதப்போய் இப்படியொரு பெயர் என்னோடு வந்து ஒட்டிக்கொண்டுவிட்டது.

“இதால செலவல்லாம வரவொன்டுமில்லயே”-இப்படித்தான் இரவு பகலாக எனது எழுத்து வேட்கையை பார்த்து ஆரம்பத்தில் வாப்பா சொன்னார். அந்த எழுத்தையே பயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தி அவருக்கு மகுடம் சூட்டுவதா? சரி அதையே செய்து விடுவோமே!

இனி அவரைப்பற்றி என்னதான் எழுதுவது? ஒரு வாப் பாவைப் பற்றி ஒரு பிள்ளை எழுத ஆயிரம் விஷயங்கள் இருக்கும். ஒரு புத்தகமே எழுதிவிடலாம்தான்.

எனது வாப்பாவை சிலபேர் ராலஹாமி என்பார்கள். இன்னும் சிலபேர் லியனமஹத்தயா என்பார்கள். கொஞ்சம் படிப்பு வாசனையும் உண்டு. இவற்றுக்காக அவர் ஒரு செல் வாக்கான மனிதன் என்று மாத்திரம் சொல்லிவிட முடியாது. கொஞ்சம் மதிப்புண்டு. அவ்வளவுதான்!

ஒரு சாதாரண மனிதனான அவரைப்பற்றி ஒரு புத்தகம் எழுதி .. அதை அச்சிடுவதாகவும் கற்பனை பண்ணினால்.. அந்தப் புத்தகத்தை யார்தான் வாங்கி வாசிக்கப்போகிறார்கள்! சும்மா வீட்டில் அடுக்கி அழகுபார்க்கவா? வேண்டாம் இந்த வேலை. இரண்டொரு கதைகள் எழுதினால் போதும் என்ற முடிவுக்கே இறுதியாக வந்தேன்.

எத்தனையோ சம்பவங்கள் .. கண்டிப்பான நடவடிக்கை கள் ... முன்யோசனையான அணுகு முறைகள். இப்படி நான் முந்தி நீ முந்தியென மனதிலே வந்து அலை மோதின. போட்டிபோட்டன. சரி இதைத்தான் முதலில் எழுதுவதென பெரும் போராட்டத்துக்கு மத்தியில் நான் தீர்மானத்துக்கு வந்தேன்.

****

நோன்புப் பெருநாள் நெருங்கிக் கொண்டிருந்தது.

அப்பொழுது நான் ஆறாம் வகுப்பில் படித்துக் கொண் டிருந்தேன். என்னிலும் இரண்டு வருடம் மூத்த ஒரு நானா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு.

இருவருக்கும் பெருநாள் உடுப்பு வாங்குவதற்காக காரிக்கடைக்கு வாப்பா எங்களை அழைத்துச் சென்றிருந்தார்.

கொஞ்ச நாட்களாகவே இருண்ட பச்சை நிறத்தில் நீட்டக்களிசான் ஒன்று உடுக்க வேண்டுமென்ற ஆசை எனக்கு. அந்த நிறத்தில் பலபேர் களிசான் அணிந்திருந்ததால் ஏற்பட்ட கவர்ச்சி அது. அதற்கு ஜங்கிள் காக்கி என்ற பெயரென்று பின்னர் தெரிந்துகொண்டேன்.

எனது ஆசையை மெல்ல வாப்பாவுக்கு சொன்னேன். உள்ளூர் பாடசாலையில் இந்த நிறத்தில்தான் உடுப்பு இருக்கவேண்டுமென்ற ஒரு விதிமுறை இருக்கவில்லை.

கமர்நானா பிடவை அலுமாரியிலிருந்து அந்த பீஸை எடுத்து நாலைந்து மடிப்புவிரித்துப் போட்டார். பிடவை பளபளத்து நின்றது. என்ன செய்வது.. விலை சற்று கூடத்தான்.

நானா, வசதி குறைந்த மாணவர்களுக்காக எட்டாம் வகுப்பில் நடாத்தும் கோமேந்து சோதனையில் பாஸாகி அல்காமத்தில் படித்துக் கொண்டிருந்தார். அங்கு வெள்ளை உடுப்பே அணிய வேண்டுமென்பதால் வெள்ளைக் களிசானுக் கே விண்ணப்பித்திருந்தார்.

இரண்டு வகையான பிடவைகளதும் விலைகளை ஒப்பிட்டுப் பார்த்தபோது, ஜங்கிள்காக்கி ஒன்று வாங்கும் விலைக்கு வெள்ளையில் இரண்டும் வாங்கலாம் என்ற நிலை.

நான் வெள்ளைக்கு இறங்கவுமில்லை. நானா காக் கிக்கு ஏறவுமில்லை. பெறுமதிபற்றி அலட்டிக்கொள்ள இரு வருக்குமே தெரியவுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாப்பா சொன்ன நியாயம் ஆலோசனைகள் எதையுமே நான் ஏற்றுக்கொள்ளாமல் விடாப்பிடியாக நின்றேன். அந்த வருடம் ஒன்று கூடத் தப்பாமல் எல்லா நோன்பையும் நான் பிடித்திருந்ததால் பெருநாள் ஆசையை நிறைவேற்றுவதிலும் வாப்பா நிதானமாகவிருந்தார்.

"சரி அப்பிடியெண்டா ஒனக்கு ஒண்டு. நானாக்கு ரெண்டு. சரிதானே"- வாப்பா இறுதியாகச் சொன்னார்.

இருவரும் வெகு சந்தோஷமாக பிடவைப் பொதியோடு வீட்டுக்கு வந்தோம்.

****

படித்து வளர்ந்து தொழில் செய்யும் நிலைக்கு வந்து விட்டேன். கூடவே என்னோடு ஒட்டிநின்ற எழுத்தாளனும் பொலிவுற்று வளர்ந்து விட்டான்.

"இவன் அந்த இந்தப் பொஸ்தகமெல்லாம் வாசிச்சி வாசிச்சி, பெரிய கொழப்பகாரனாப் பெய்த்தான். அவனெழுதிய கதயெல்லாம் இப்ப அப்பிடித்தான் போகுது.." -இப்படி பரவலாகவே பலரும் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள்.

நான் புத்தகங்கள் வாசிப்பது உண்மைதான்.

ஏதோ விளையாட்டாக எழுத ஆரம்பித்து, காலப்போக்கில் மனிதர்கள் மத்தியில் ஏற்றத்தாழ்வுகள் இல்லாத சமத்துவமான சமுதாயமொன்று உருவாக வேண்டு மென்ற நோக்கத்தில் எழுதிவருவதும் உண்மைதான்.

ஜங்கிள்காக்கி மூலம் என் சின்ன மனதிலே வித் தூன்றி.. அதையே பெருவிருட்சமாய் வளரவைத்ததவர் வேறு யாருமல்ல. மௌத்தாகிப்போன வாப்பாவேதான்.

ஆனால் இந்த இஸம்கள் பற்றி எதுவுமே அவருக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்ததாக சத்தியமாக எனக்குத் தெரியவில்லை.

1991 - 03 - 28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாப்பாடு

சின்னப் பள்ளிவாசலில் அன்று வித்தியாசமானதொரு இயங்குநிலை. இஷாத் தொழுகையைத் தொடர்ந்து தஃலீம் வாசித்து முடித்த பின்னரும்கூட வெளிச்சாலையில் சிலபேர் கூடிநின்றனர். அந்த மஹல்லாவில் பள்ளிவாசலோடு தொடர்புடைய முக்கியஸ்தர்களின் முகங்கள் சந்திப்பு நடத்தின.

சுன்னத்து தொழுதுமுடித்த ஹஸ்ரத் இந்தச் சூழ் நிலையை பதிவுசெய்துகொண்டு தனது மேல்மாடி அறையை நோக்கி மெல்ல ஏறினார். அவருக்காக அங்கே சாப்பாட்டு பாஸ்கட் காத்திருந்தது.

சின்னப் பள்ளிக்கு ஹஸ்ரத் வந்து சேர்ந்து இரண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதங்கள்தான். எட்டு வருடங்கள் மகரகமையில் ஓதி, மௌலவிப் பட்டம் பெற்று முதன்முதலில் வந்துசேர்ந்த இடமும் இதுதான். வாலிபப் பருவத்தில் சமுதாயத்துக்கு ஏதாவது செய்துவிடவேண்டுமென்ற துடிப்பு.

"ஹஸ்ரத் ஒங்கள வரச்செல்லிய"- வந்ததும் வராததுமாக முகம் தெரிந்த பெயர் தெரியாத ஒரு நபர் வந்து விடுத்த அழைப்பு இது.

கழற்றி வைக்கப்போன ஷேட் பொத்தான்களை மீண்டும் இறுக்கிக்கொண்டு படியிறங்கினார் ஹஸ்ரத்.

மூயீன் ஹாஜி... காதர் ஹாஜி.. ஜாபிர் ஹாஜி உட்பட இன்னும் நாலைந்து பேர் கொண்ட குறுவட்டமொன்று. யார் யாரோ புதினம் பார்க்கும் பாங்கில் அங்குமிங்குமாக...! இதுதான் நிர்வாக சபைக் கூட்டமாக இருக்கவேண்டுமென எண்ணிக்கொண்டார் ஹஸ்ரத். இந்த இரண்டு மாதத்திலும் இப்படியொரு காட்சி இதுதான் முதற்தடவை.

நிர்வாகமென்று ஏதோவொன்று இங்கும் இருக்கத்தான் செய்கிறதென்பதற்கு ஒரேயொரு சாட்சியாக!

"ஹஸ்ரத் கொஞ்சம் வாங்கொ"– முயீன் ஹாஜியார் இப்படி அழைத்தார்.

மெல்லிய சிரிப்பொன்றை இளந்தாடிக்கூடாக சிந்தியவாறு தனக்கு ஒதுக்கித்தந்த இடத்தில் அமர்ந்து கொண்டார் ஹஸ்ரத்.

ஒருசில கணங்கள் நீண்டதொரு மௌனம்.

"ஒங்களப் பத்தி ஒரு ரிபோட் வந்தீக்கி"

ஷெல்லடிக்கு ஆளாகி உணர்வு சற்றே அந்தரத்தில் தொங்கிநிற்பது போலிருந்தது ஹஸ்ரத்துக்கு! தான் சந்தோஷ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தது குற்றவாளிக் கூண்டுக் குத்தான் என்பது அப்போதுதான் அவருக்குப்பட்டது. இதென்ன அநாகரிகமென்று மனம் ஓலமிட்டது.

"எனத்தியன் விஷயம் ஹாஜியார்?" - தீனக்குரலில் கேட்டார் அவர்.

"நீங்க கொறநெனக்கப்படாது ஹஸ்ரத்.... இத விசாரீக் காட்டி மஹல்லாவாசியள் எங்கள சும்முடமாட்டாங்க"- இது காதர் ஹாஜியார்.

ஹஸ்ரத் சுற்றுமுற்றும் பார்த்தார். அபூர்வ மிருகமொன் றை கூண்டுக்குள் அடைத்து சூழ நின்று வேடிக்கை பார்ப்பது போன்ற காட்சி.

"ஹஸ்ரத்மார் எல்லா விஷயத்திலேம் மிச்சம் பேணு தலா ஈக்கோணும்.. நீங்க ராவு ராவா ஒவ்வெரெடுத்துக்கும் பெய்த்து டெக் பாக்கியாம்.."

முயீன்ஹாஜி முடித்தாரோ இல்லையோ ஏளனச் சிரிப் பொன்று கூட்டாக வெடித்தது. அதைத் தொடர்ந்து கசமுச....

"இந்தக் கூத்தியள் இங்க சரிவாரல்ல"

"ஹஸ்ரத்தென்டாலும் யங்பொடியனெனா"

"ஜமாத்து வேலக்கும் சபோட்டில்லயாம்"

இந்தக் கூற்றுக்கள் ஹஸ்ரத்தின் காதுகளை உரசிக் கொண்டு போகாமலில்லை. நீண்ட வாதமொன்றுக்கு இறங்கு வதா.. இல்லை இத்தோடு காரியத்தை குளோஸ் பண்ணு வதா.. அவரால் ஒரு முடிவுக்கு வந்துகொள்ள இயலாத திண்டாட்டம்.

"ஹஸரத் பேசுங்கொ"- ஓர் அநாமதேயக் குரல் .. கிண்டலாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னதான் பேசுவது? அவர்தான் தீர்மானத்துக்கு வந்தாயிற்றே.

"நான் டெக் பாத்தது மெய்தான்-" ஹஸ்ரத் நிதான மிழக்காது சொன்னார்.

"பாத்தா பயப்புடாம செல்லியத்த... இவனியள பள்ளீல வெச்சிக்கொள்ளேலுமா......"- பேசவேண்டியவர்கள் மௌனித் திருக்க வால்களின் ஆட்டம்.

"வெச்சிக்கொள வாண.... இதுக்குப் பொறகு நான் நிக்கப்போறேமில்ல" -அதற்குமேல் அவ்விடத்தில் நிற்க விரும் பாத ஹஸ்ரத் விறுவிறுவென மாடிப்படிகளில் ஏறினார்.

கீழே பேரிரைச்சல் கேட்டது. ஒரு கொலைகாரனைக் கூட விசாரிக்க ஒரு முறையுண்டு. ஒழுங்கில்லாத இடத்தில் வேறென்னதான் இருக்க முடியும்! செ... வகையாக வந்து மாட்டிக்கொண்ட இடம்.

ஹஸ்ரத் தனது பேக்கை தயார் படுத்தினார். உடுப்பு கள்.. கிதாபுகள்.. போன்றவற்றை திணித்துக்கொண்டார். ஒரு மாத சம்பளம் அவருக்கு முழுமையாகக் கிடைக்க வேண்டி யுள்ளது. அதைப்பற்றியெல்லாம் அவர் அக்கறை கொள்ள வில்லை. ஊருக்குப் போய்ச்சேர காசிருக்கிறதேயென்ற திருப்தி.

குற்றத்தை ஒப்புக்கொண்டு.. மன்னிப்புக்கோரி.. தொடர்ந்து ஒட்டிநிற்க பிரயத்தனப்படுவாரென்றே எதிர் பார்த்த வர்கள் ஏமாற்றத்தால் குமைந்து போயினர். மீண்டும் ஒரு ஹஸ்ரத் தேடுவதிலுள்ள சிரமத்தை புரிந்து கொண்டவர்கள் எப்டியாவது சில காலம் இருத்திக்கொள்ள அபிப்பிராயப் பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொகுடுங்கொ பொகுடுங்கொ.. இப்பிடியானவங்களால எங்களுக்கு வேலில்ல-" பல குரல்கள்.

இருள் மெல்ல மெல்ல பிரியாவிடைபெறும் அதி காலைப்பொழுது. பேக்குகள் சகிதம் பஸ்ஹோல்டுக்கு வந்து சேர்ந்துவிட்டார் ஹஸ்ரத்.

அந்த சந்தியை .. எழுந்து நிற்கும் கட்டிடங்களை .. அதற்குப் பின்னால் தெரியும் மரங்களை.. நடமாடும் மனிதர் களை.. அடக்கப்போகும் மையத்தை இறுதியாகப் பார்ப்பது போல் பார்த்துக்கொண்டார் அவர். மீண்டும் இந்தப் பக்கத்தை நினைப்பதையே அவர் மனம் ஹராமாக்கிவிட்டது.

நேற்று இந்த நேரத்தில் நினைத்திராத... இன்று இந்த நேரத்தில் நிகழ்ந்துவிட்ட காரண காரியத்தை எப்படி இரை மீட்டாமலிருக்க முடியும்?

அன்று இரவு தாங்க முடியாத பசி. பத்துமணியையும் தாண்டி இனிமேல் எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லாததால், பச் சைத் தண்ணீரில் ஒரு கோப்பை குடித்துவிட்டு மெல்ல இறங்கி ரோட்டுக்கு வந்து எட்டிப்பார்த்தார்.

அன்றைக்கென்று போயாநாள். கௌமினி கடையும் மூடி யிருந்தது. இல்லாவிட்டால் பதினொரு மணிவரை திறந்திருக் கும். அதில் பக்கற் பணிஸ் வாழைப்பழங்களாவது இருக்குமே!

உரியவர்கள் அட்டவணைப் பிரகாரம் சாப்பாடு அனுப்பி வைக்காத சிக்கல்தான் எல்லாம். மாதத்திற்கு ஒரு நாளில் ஒரேயொரு நேரம் அதைக்கூட பொறுப்பாக செய்யாதவர்களும் அவர்களுக்கென்றொரு நிர்வாகமும்..!

இதற்கு முன்பும் இப்படி நடக்காமலில்லை இதைப் பேசப்போனால் "எச்சிப்பேச்சி" என்பார்கள். அதனால் தேத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணிக் கடைகள் கைகொடுக்கும். இன்று மஹல்லா நாள். பயான்.. மஷூரா எல்லாம் முடிந்தும் சாப்பாட்டு பாஸ்கட் வரவில்லை என்பதை அறிந்து மேலும் சிறிதுநேரம் எதிர் பார்த்து.. இனிச் சரிவராது என்ற முடிவோடு ரோட்டுக்கு வந்த போது தேத்தண்ணிக் கடையும் அவருக்கு கண்ணா மூச்சுக்காட்டிவிட்டது.

"எனத்தியன் ஹஸ்ரத் ரோட்டுப் பொக்கத்துக்கு ...."- பள்ளி ஸ்க்ரிஞ்ஞாவில் ஒன்றுக்கிருந்துவிட்டு வந்த நைஸர் நானா கேட்டார்.

"இந்த தேத்தண்ணிக்கட தொறந்தீக்கான்டு பாத்த..-" மனம் விட்டுப் பழகும் ஒருவர் என்பதால்தான் ஹஸ்ரத் அப்படிச் சொன்னார்.

"சிகரேட்டாலும் குடிக்காத மனுசன் இந்த டைமில தேத்தண்ணிக் கடக்கா"

"இன்டக்கி சாப்பாடு வரல்லயா ஹஸ்ரத்?"-நைஸர்நானா சரியாக நாடிபிடித்துக்கொண்டார்.

ஹஸ்ரத்தின் புன்னகைதான் பதிலாக அமைந்தது.

"வாங்கபோம் ஊட்டுக்கு .. ஒங்கள பசீல போடேலுமா?"

அன்றுதான் நைஸர்நானா வீட்டுக்கு முதன் முதலாக காலடிவைத்தார். நாலைந்து வாலிபர்கள் முன் வாசலில் அமர்ந்து கலகலத்துக் கொண்டிருந்தனர். அந்தச் சின்னஞ்சிறு வீட்டுக்குள்ளும் ரீவி, டெக் இப்படி நவீன சாதனங்களுக்கு குறைவிருக்கவில்லை. உள்ளே புகுந்த நைஸர்நானா வெளி யே வருவதாக இல்லை. அக்கம் பக்க சாச்சி பெரியும்மா வீடென்று ஓடியாடி சாப்பாடு ஒழுங்கு பண்ணுவதில் மூழ்கிப் போய்விட்டார் அவர். கைப்பட மிளகாய் வெங்காயச் சம்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லொன்று தயாரிக்கவும் தவறவில்லை.

"ஹஸ்ரத் வாங்கொ-" நைஸர்நானா இங்கிதமாக அழைத்து நின்றார்.

ஹஸ்ரத்தின் வயிற்றுக்குடல் மெல்ல மெல்ல நிமிரத் தொடங்கியது. நைஸர் நானாவுக்கு ஒழுங்காகச் சோறு படைக்க முடியவில்லையே என்ற ஆதங்கம். ஹஸ்ரத்துக்கோ இதற்கிடையில் இவ்வளவு பிரமாதமாக ஒழுங்குபடுத்திவிட்டா ரே என்ற பெருமிதம். பதினைந்தே நிமிடத்தில் "அல்ஹம் துலில்லா" என்று எழுந்துவிட்டார் அவர்.

"ஹஸ்ரத் எங்கட தம்பி ஸவூதீலீந்து முந்த நாத்துத் தான் வந்த. நல்லோரு பீஸ் கொணந்தீக்கி"

வீட்டில் நிலவிய கலகலப்புக்கு என்ன காரணமென்று ஹஸ்ரத்துக்கு இப்போது விளங்கிவிட்டது.

"நல்லோரு பீஸென்டா.."- எதுவும் புரியாமல்தான் அவர் கேட்டார்.

"உமர் முக்தார் படம்"

எவ்வளவோ நாட்களுக்கு முன் கேள்விப்பட்டு.. பார்க்க ஆசைப்பட்டதுதான். லிபியாவில் வெள்ளையரின் அட்டகா சத்துக்கெதிராகப் போராடிய தியாகியின் உண்மைச் சித்திரம்.

"அப்பிடியா...?"

"ஹஸ்ரத் புரியமென்டா போட்டுப் பாக்கேலும்"-நைஸர் நானா தயாரானார்.

வாலிபர்களின் முகத்திலும் புன்னகை வந்தமர்ந்தது. இன்னொருமுறை பார்க்க சந்தர்ப்பம் வாய்க்கிறதில்லயா.

அன்றுதான் அந்த ஊரில் முதலும் கடைசியுமாக டெக்கிலே ஒரு படம் பார்த்த நாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வௌணேம எங்கியன் ஹஸ்ரத் ஊருக்குப்பொகவா"- முகப்பழக்கமுள்ள ஒருவரின் விசாரிப்பு.

"பொகத்தான்" என்றவர் "மறுபேணம் வாரல்ல" என்று சொல்லவில்லை.

அப்பாடா என்று வந்த மினிபஸ் ஹோல்டை துடைத்து வழித்துக்கொண்டு பறந்தது.

****

சற்று நேரத்தில் வேகமாக வந்த சைக்கிளொன்று டப்பென்று நின்றது. இஸ்மாயில் நானா நாலுபுறம் உருட்டிப் புரட்டிப் பார்த்தபடி குதித்து இறங்கினார்.

"ஹஸ்ரத் பஸ்ஸுக்கேறிட்டா?" அங்கு நின்றவர்களைப் பார்த்து பதறியபடி கேட்டார்.

"இப்பதான் வேனில ஏறின. அஞ்சி நிமிஷமாகல்ல"

"அநியாயம்" என்றபடியே சைக்கிளைத் திருப்பியபடி இளைத்திளைத்து நடந்தார். 'பாதையிலே துருத்தி நின்ற கற்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முள்ளாக...

"சாப்பாடு அனுப்பாதவங்கள குத்தவாளியாக்காம டெக் பாத்தெண்டு குத்தத்த ஒத்துக்கொண்டு..... கடசீல தொழிலேம் உட்டிட்டு பெய்த்தாரு..ம்..எவளவு தங்கமான மனிசன் எங்க டீரானியள் அதவௌங்கெடுக்காம அவரட மனச நோவிச்சி சே.. எனக்குத்தான் செருப்பால அடிக்கோணும் அன்டக்கி பயணமொன்டு பொகவாண....: செல்லீட்டுப் பொகமறந்திட்டன் ஊட்டாள்களும் சாப்பாட்ட அனுப்பல்ல."

1992.08.30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடுதலை

"ஊட்டில தாரன்...ம்... ஒத்தருமில்லபோல... ஊட்டில தாரன்?"

வீட்டு வாயிலில் நின்று தன்னை யாரோ அழைப்பது, உள்ளறையிலிருந்த ரஸ்ஸாக் நானாவுக்கு கேட்கத்தான் செய்தது. யாரும் இப்படி வந்து அழைப்பதற்கு என்ன அவசியம் வந்துவிட்டது என்று அவரே அவரிடம் கேட்டுக்கொண்டார். அழைத்தவர் குரல்கூட பழக்கப்பட்டதாக இருக்கவில்லை.

"அத்து ரஸ்ஸாக் நானா..." -மீண்டும் அதே குரல் தெளிவாக ஒலித்தது.

"ஒங்கள தாரோ கூப்பிடிய போலீக்கி"... மனைவியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல் கேட்டு டக்கென்று எழுந்தார் அவர். சமையலறைக் குள்ளிருந்து திடுதிப்பென வந்திருக்கிறாளென்பதற்கு கையி லிருந்த வெட்டுக்கத்தி சாட்சிசொன்னது.

"அதுதான் நானும் யோசிச்ச.. சரி பாக்கியன்..."-என்ற வாறு முன்னே வந்தவர் கிரிலுக்குள்ளால் முதலில் பார்த்தார். உண்மையில் யாரோ நிற்பது தெரிந்தது.

மனதுக்குள் திக்திக்கோடு கதவைத்திறந்தார் ரஸ்ஸாக் நானா.

"நீங்க ரஸ்ஸாக் நானதானே"-வந்தவர்.

ஓ எனத்தியன்? "ஒங்கள ஹாஜியார் கொஞ்சம் வரச் சென்ன" வந்தவர் இப்படிச் சொன்னபோது, எதையெண்ணி மருண்டுபோனாரே.... அதுவேதான் என்பது ஊர்ஜிதமாகிவிட்டது.

"எந்த ஹாஜியாரன்? சந்தேக நிவர்த்திக்காக இப்படி யொரு கேள்வியைப் போட்டார்.

"ஸாரி பெலஸ் ஹாஜியார்தான்" ..

"எனத்தியன் விஷயம்!" முன்பின் ஒன்றும் தெரியாத பாங்கில் ஏதாவது தகவல் கிட்டுமா என்ற நோக்கில் கேட்டார்.

"எனக்கு அதப்பத்தி ஒன்டும் தெரிய"- உண்மையில் அவருக்கு மேல்விபரம் எதுவும் தெரிந்திருக்கவில்லைதான்.

"சரி வாரெண்டு செல்லுங்கொ"

வந்தவரை அனுப்புவதற்காக இப்படிச் சொன்னபோதும் ரஸ்ஸாக் நானாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. லேசாக வியர்த்தது அவருக்கு.

"கடன்பட்டார் நெஞ்சம்போல" என்று சொல்வார்களே அது எப்படி என்பது இப்பொழுதுதான் ரஸ்ஸாக் நானாவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிய ஆரம்பித்தது. இந்த ஒரு வருடமாக வியாபாரத் தொடர்பில் ஸாரி பெலஸ் ஹாஜியாருக்கு இருபத்தையாயிரத்துக்கு மேல் கடன். அவரும் எத்தனை நாளைக்கென்று தான் பார்த்திருக்க முடியும்!

ரஸ்ஸாக் நானாவுக்கு ஐம்பது வருடத்துக்கு மேலாகிறது. அதிகம் படித்தவரல்ல; ஏதாவது காலத்துக்குக்காலம் வியாபாரம்தான் அவருக்கு கைகொடுத்து வந்தது. எப்படியோ இருபத்தைந்து வருடங்களாக பஜாரில் எவருக்கும் தெரிந்த ஒருவராக மாறிவிட்டார் அவர்.

அதேபோல் நம்பிக்கைக்கு பாத்திரமானவரும் கூட! பெரிய வியாபாரிகள்... மொத்த வியாபாரிகள் கூட, அவரது நட்புக்குரியவர்கள்தான்.

வெளியூர்களிலிருந்து வரக்கூடிய வியாபாரிகளைத் தொடர்புபடுத்துவதும் சிறிய வியாபாரிகளுக்கு உதவும் புரோக்கராகவும் அவர் இயங்கினார். மாலையில் ஒவ்வொரு கடையிலிருந்தும் கிடைக்கவேண்டியது அவருக்கு கிடைத்து விடும். முதல் இல்லாத தொழில்தான்.

காலப்போக்கில் மிக நம்பிக்கையானவர்களோடு காசோலைப் பரிமாற்றத்துடன் தனது தொழிலை விஸ்தரித்தார்.

எதிர்பாராதவிதமாக நாட்டில் தீடீர் தீடீரென ஏற்பட்ட அல்லோல கல்லோலங்கள்..... அழிவு.... இழப்பு இவைகளால் ரஸ்ஸாக் நானாவும் பாதிக்கப்படத்தான் செய்தார்.

டேட்செக் கொடுத்து அவர்மூலமாக ஆயிரகணக்கிற்கு பொருள்களைப் பெற்றுக்சென்ற சில வெளியூர் வியாபாரிகளுக்கு என்ன நடந்ததென்றே தெரியாத நிலை. முகவரிகள் கூட அற்றுப்போய் கடைசியில் கடன்காரனானது ரஸ்ஸாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானாதான். தொடர்புகளை வைத்திருந்த அவருக்கு முகம் கொடுக்க முடியாமல் போய்விட்டது. எப்படிபாயாவது கொடுத்துத் தீர்க்க முயன்ற போதிலும் இன்னும் இரண்டொரு பேருக்கு பாக்கி இருக்கவே செய்தது.

"எனத்தியன் யோசின.. தாரன் தேடிவந்த?"- சற்றே குசுனி வேலைகள் ஓய்ந்த நிலையில் முந்தானையில் கைகளைத் துடைத்தபடி முன்னேவந்து நின்றாள் அவர் மனைவி.

"ஸாரி பெலஸ் ஹாஜியார்தான் வரச்செல்லீக்கி .. எனத்தியோ தெரிய"- என்றார் ஒன்றும் அறியாதவர் போல.

"அப்பிடியென்டா எனத்தசரி யாவார விஷயமாத்தானீக்கும்"- தனது ஊகிப்பை வெளியிட்டாள்.

இடைக்காலத்தில் ஏற்பட்ட எதிர்பாராத சில நிகழ்வுகளால் ரஸ்ஸாக் நானா கொஞ்சம் கடன்காரனாகிவிட்ட விஷயம் அவர் மனைவிக்கு தெரியாததல்ல. ஆனால் யார் யாருக்கு என்னென்ன தொகையென்று அவளுக்குத் தெரியாது. அவர் விபரமாக ஒன்றும் சொல்லவுமில்லை.

"யாவார விஷயமென்டா கடேலே கதச்சிக்கொளேலும். நான்தானே அடிக்கடி கடக்கிப்போற-" தனக்கு போக விருப்பமில்லாததை மூடிமறைத்து நியாயம் பேசினார் ரஸ்ஸாக் நானா.

"ஆளனுப்பி ஊட்டுக்கு வரச்செல்லியென்டா எனத்தசரி ஈக்கும்... எதுக்கும் நீங்க பெய்திட்டு வாரதுதான் நல்லம்"- எப்படியாவது அனுப்பிவைக்க அவள் முனைந்தாள்.

"இந்தப் பட்டப்பகல்ல பொகேலுமா.. நெருப்பு மாதிரி வெய்ல .. அஸரு தொழுதிட்டுப் போனாத்தான் ராஹத்து"

எப்படியோ கணவன் போவது உறுதியான பின்புதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்கு நிம்மதிப் பெருமூச்சு வெளியேறியது.

ஸாரிபெலஸ் ஹாஜியார் கடன் விடயமாக இரண்டு மூன்று தடவை கேட்டுவிட்டார். "தாரன் தாரன்" என்று சொல்லி யும், இன்னும் கொடுத்துக் கொள்ள வாய்க்காத சங்கதி யெல்லாம் அவருக்கல்லவா தெரியும்! வீட்டுக்கழைத் திருப்பது வேறென்னத்துக்கு .. கடன் கேட்கத்தான் என்பதை நினைக் கும்போது ரஸ்ஸாக் நானாவின் கால்கள் பலமிழந்து கொண்டு வந்தன. அதற்காக மனைவி விடுவாளா என்ன?

பகல் பேருக்கு ஏதோ கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு சாய்ந் தார். பக்கத்துப் பள்ளிவாசலில் அதுவும் ஸ்பீக்கரில் பாங்கு சொன்னதுகூட அவர் காதைத் துளைக்கவில்லை.

"எழும்புங்கெழும்புங்கொ.. அஸருக்கு பாங்கும் செல்லீட்ட.. ஹாஜியாருட்டுக்கு பொகோணுமே"

மனைவியின் குரல் கேட்டு ரஸ்ஸாக் நானா கண் விழித்த போது அவள் கோப்பிக் கோப்பையுடன் எதிரே நின்றாள். இனி விடுவாளா என்ன! எழுந்து தயாரானார்.

இருபத்தையாயிரத்தையும் எப்படிக் கொடுப்பது? என்ன பதில் சொல்லித்தான் தப்புவது? எதுவுமே புரியாமல்தான் ஹாஜியாரின் வீட்டில் காலடி வைத்தார் ரஸ்ஸாக் நானா.

"ஆ.. ரஸ்ஸாக் நானா வாங்கொவாங்கொ நான் பகலேலீந்து ஒங்கள பார்த்துக்கோ நிக்கிய"

ஹாஜியாரின் வரவேற்பு பிரமாதமாக இருந்தது. அவரது முகத்தில் கூட அலாதியானதொரு புன்சிரிப்பு. அவரது மன தில் துருத்திக் கொண்டிருந்த பயம் பதட்டமெல்லாம் ஒரே நொடியில் தீய்ந்து போய்விட்டது.

"அல்லாட ஏற்பாட்டப் பாருங்கொ. இந்தப்பைணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸகாத் கணக்கு வழக்கெல்லம் நான் பாத்து முடிச்சிட்டன். எனக்கு கடன்தரோண்டிய ஏழெட்டுப் பேரீக்கி. அதில நீங் களும் ஒத்தர்.... எல்லாரடேம் பிரச்சினய நான் முடிச்சிறப்போற"

ஹாஜியாரின் பேச்சு ரஸ்ஸாக் நானாவின் உச்சந் தலையில் குளிர்நீரை அள்ளி வார்ப்பது போலிருந்தது. அவர் ஆடாமல் அசையாமல் அப்படியே நின்றார்.

"நீங்க ஒரு இருவத்தஞ்சி தரோணும்..அந்தத் தொகய நான் ஒங்களுக்கு ஸகாத்தா தாரன். அத நீங்க திருப்பித்தந்து கடனிலீந்து வெளிசாகியதா வெச்சிக்கோங்க.. சரிதானே... இதச் செல்லத்தான் ஒங்கள வரச்சென்ன"- பதிலை எதிர் பார்த்து நின்றார் ஹாஜியார்.

"அல்ஹம்துலில்லா .. அல்லா சரியான யோசினய ஒங்கட மனசீல போட்டிக்கான்.. எல்லா ஹாஜிமாரும் இப்பிடி யோசிச்சா எல்லாப் பிரச்சினேமே தீந்துபொகும்-" ரஸ்ஸாக் நானா ஒரு ஆலிமாக மாறி பயான் பண்ணத் தொடங்கினார்.

"சரி பெய்த்திட்டு வாங்க"- ஹாஜியார் மகிழ்ச்சியோடு விடைகொடுத்தார்.

கடன் விலங்கிடப்பட்ட ஒரு கைதியாக அங்கே புகுந்த ரஸ்ஸாக் நானா விடுதலை பெற்ற புதுமனிதனாக அங்கிருந்து வெளியேறினார்.

1992-12-10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழட்டுக் குதிரை

இருட்டுப் போர்வையை கலைந்துவிட்டு உலகம் இன்னும் கண்விழிக்கவில்லை. ஆனால் காதர்நானா வழமை போல் கண்விழித்துவிட்டார். குறிப்பிட்ட நேரத்தில் அவர் நித்திரை கலைவதற்கு எந்தச் சத்தமும் வந்து அவர் காதில் மோதத் தேவையில்லை.

அவர் எழுந்து கொஞ்சம் அங்கும் இங்குமாய் தடு மாறுகையில், எதிர்பக்கமாகப் பாயில் புரண்டு கொண்டிருந்த பீபிதாத்தா வாரிச்சுருட்டிக் கொண்டெழுந்து அமர்ந்து கொண் டாள்.

அவர்கள் இருவரும் சந்தோஷமாக தனிக் குடித்தனம் நடத்துபவர்களாயிற்றே! கல்யாணம் கட்டி... பிள்ளை குட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று.. அவர்களது கல்யாணம் காட்சிகளைக் கண்டு.. மீண்டும் தனிக்குடித்தனம்.

இருளைத் துழாவிக்கொண்டு காதர் நானா எழுந்தா ரென்றால் ... ஒன்றுக்கு ரெண்டுக்குப்போய், முகம் வாய் கழுவி, ஸாரம் சட்டை மாற்றி பள்ளிக்குப் புறப்பட முப்பது நிமிஷம் எடுக்கும். அதற்கிடையில் பீபிதாத்தாவுக்கு ஒரு முக்கிய கடமை.

சோம்பல் முறித்துக்கொண்டு எழுந்தால், அடுப்புமூட்டி கேத்திலை வைத்தபின்புதான் மறுவேலை.

நேரப் பிரகாரம் கோப்பிக் கோப்பை அவரது கைக்குப் போகாவிட்டால் "அடி பீபீ...ய்" என்றொரு சப்தம் வைப்பார். அதிகாலை வேளையில் அந்த அகோர ராகம் அவளுக்குப் பிடிப்பதேயில்லை.

கேத்தல் தன் மூக்குத் துவாரத்திற்கூடாக "புஸுபுஸு" வென்று வெப்பக் காற்றை கக்கத் தொடங்கியது.

"மோடர்மில்க்" போத்தலிலிருந்து அரைக்கரண்டியால் நிறைத்து இருகரண்டி கோப்பித்தூள் போட்டு, ஒரு கரண்டிச் சீனியுமிட்டு கொதிநீரை ஊற்றிக் கலக்கி மூடிவைத்தாள். இறுக்கமாக ... இனிப்புக்கும் கசப்புக்கும் இடையிலான பதத்தில்தான் காதர் நானாவுக்கு கோப்பி வேண்டும். இல்லா விட்டால் அவரது ஈமானுக்கு படுவதில்லை.

"கோப்பி ஊத்தினா பீபி-" பின்பக்கமிருந்து முகத்தைத் துடைத்தபடியே வந்தவர் கேட்டார்.

"ஆ இந்தாங்கொ"- இரண்டு கைகளாலும் கோப்பிக் கோப்பையை நீட்டினாள் அவள்.

சாசுவதமாக அமர்ந்து தொண்டையை கனைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாக்கைத் தட்டித் தட்டிக் குடிப்பதை நிலைப்படியில் சாய்ந்த படி ரசித்துக் கொண்டிருந்தாள் பீபிதாத்தா.

"அல்ஹம்துலில்லா"

இப்படி அவர் எழுந்தபோது அவளுக்கு நெஞ்சு நிறைய நிம்மதி.

"தொழுதிட்டு வாரன்" - அவர் படியிறங்கி நடந்தார்.

ஒவ்வொரு நாளும் தவறாமல் அவர் ஐவேளையும் அல்லாஹ்வை தொழுகிறாரோ, இல்லையோ என்பது அவளுக் குத் தெரியாது. ஆனால் ஒவ்வொருநாளும் தவறாமல் சுபஹு தொழுவது மட்டும் அவளுக்கு உறுதி.

இருள் விலகுவதா இல்லையா என்று தடுமாறும் வேளை. வீடு வாசலிலிருந்து பள்ளிவாசலை நோக்கிப்போ வோரும்.. பள்ளிவாசலிலிருந்து தொழுதுவிட்டு வருவோரையும் தவிர நடமாட்டம் இல்லை. இடையிடையே வாகனங்கள் காலைப் பயணிகளை சுமந்து கொண்டு அலைந்தன.

அவர் பள்ளி வாசலுக்குள் காலடி வைக்கும் போது நேரம் ஐந்தே முக்கால். சுமாராக இதுதான் அவரது நேரம். பெரும்பாலும் கடைசிக் கோச்சி-ஜமாஅத்- தான் அவருக்குக் கிடைக்கும். அன்றும் அப்படித்தான் ஸத்தார் ஸாப் தொழு வித்துக் கொண்டிருந்தார்.

அவர் நீட்டி இழுத்துத் தொழுது.. ஸிக்ரு செய்து...துஆ ஓதி முடிக்கையில் ஆறுமணியும் அடித்து விட்டது.

ஆறுமணி நகர்ந்துவிட்டால் காதர்நானாவின் உடலுக் குள் ஒரு உந்துதல். மனசு அவரை விட்டு வெளியே பாயப் போவது போன்ற வேகம். அந்த வேகம் அவரை உதைத்துக் கொண்டு வெளியே வந்துவிட்டது. கண்கள் பார்க்க வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தில் கூர்பாய்ச்சிய பின்புதான் நிம்மதி பிறந்தது.

பள்ளிவாசலுக்கு எதிர்ப்பக்கமாக சற்று தள்ளி அமைந் திருந்த பாருக் நானாவின் தேத்தண்ணிக்கடை கலகலத்தது.

ஆறுமணிச் செய்தி கேட்பதற்காக கூடிநின்ற கூட்டத் தில் ஒருவர் போல் அவரும் நெருங்கி நின்றார். அந்தச் செய்தி அறிக்கை அவருக்கு எந்தத் தாக்கத்தையும் ஏற் படுத்தி விடவில்லை. அவர்தான் எந்தவிதச் சுமையுமற்ற சுதந்திரப் பறவையாயிற்றே.

காதர் நானாவுக்கு மூன்று பிள்ளைகள். சின்னச்சின்ன வியாபாரம் செய்தே பிள்ளைகளை வளர்த்துவிட்ட பெருமை பெற்றவர்.

மூத்தவள் மர்சுனா. அவளுடைய அழகுக்காகவே அவளை திருமணம் செய்துகொண்டான் இக்பால்.

அடுத்தவன் ஷியாம். இரண்டு பிள்ளைகளின் தகப்பன். எட்டு வருடமாக சொந்தக் கடைவைத்து வியாபாரம் செய் கிறான்.

மற்றவள் ரியாஸா. கணவன் வெளிநாட்டில் வேலை.

காதர் நானாவால் பிள்ளைகளுக்கோ, பிள்ளைகளால் காதர் நானாவுக்கோ எந்தவிதத் தொல்லையும் இல்லை. உம்மா வாப்பாவை கஷ்டமில்லாமல் வாழ வழிபண்ணிக் கொண்டிருப்பவர்கள்.

ஊருக்குள்ளேயே அவர்கள் வாழ்வைக்கொண்டு நடத் துவதால் வாரம் ஒரு தடவையாவது வந்து போவார்கள். சும்மா வருவார்களா? அரிசி, பருப்பு, சீனியென்ற ஒவ்வொரு உமல் உம்மாவின் கையில் கொண்டுவந்து கொடுக்காமல் விடுவதில்லை. வாப்பாவின் சேப்பில் ஐம்பது நூறென்று போடாமல் போவதுமில்லை. நோய் நொடி.. பெருநாள் நோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பென்றால் வேறு.

காதர் நானாவுக்கு பெருவாரியான செலவென்று எதுவுமில்லை. இரண்டொரு பிளேன்ரீயும், நாலைந்து பீடியும்தான் கைச்செலவு.

என்ன இருந்தாலும் காதர்நானாவுக்கும் அன்றிலிருந்தே ஓர் ஆசை. தாராளமாக கையில் பணம் புரளவேண்டு மென்பதுதான். யாருக்குத்தான் அப்படி ஆசை இல்லை. இதற்காக அவர் எந்தத் திட்டமும் தீட்டி விடவில்லை. எந்தப்புரட்டுக்கும் தயாராகவுமில்லை. ஆனால் ஒன்றேயொன்று செய்வார்.

அந்தக்கால ஜும்கானா சுவீப் முதல் இந்தக்கால ஸங்வர்தன வரை விட்டுவைக்கவில்லை. சுரண்டிப் பார்ப்பதில் அவ்வப்போது ஐம்பது நூறு பட்டதே தவிர வேறொன்றும் கண்டதில்லை. இதற்கு மேலதிகமாக நாளாந்தம் பத்துப்பத்து ரூபாவாவது...

மரண அறிவித்தலோடு கூடிநின்றவர்கள் கலைந்து போனார்கள்.... ஏதேதோ விமர்சித்தபடி! இன்னும் ஒரு கூட்டம் பேப்பர்காரனின் வரவுக்காகத் தவம் கிடந்தனர்.

காதர் நானாவுக்கு ஒரு பிளேன்ரீ அடிக்க வேண்டும் போலிருந்தது. பாருக் நானாவின் கடைவாங்கில் அமர்ந்து கொண்டார். கண்கள் என்னவோ, எதையோ எதிர்பார்த்தபடி.

"தேத்தண்ணியொன்டு போடுங்கொ"

"எனத்தியன் செய்தி..-" பொய்லரில் நின்றபடியே கேட்டார் பாருக்நாநா.

"எந்தநாளும் ஒரு மாதிரிதான்...." என்றார் சிரித்தபடியே காதர் நாநா.

அர்த்தத்தோடுதான் அப்படிச் சொன்னார். பாருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானாவின் கடையும் என்றுமே இப்படித்தான்.

மிகப்பெரிய பொய்லர்தான் கண்களுக்கு பட்டென்று தெரியும். அதைத்தவிர்த்தால் பெரிய படர் ஸ்கோத்து போடும் வயிறு பெருத்த போத்தல் இரண்டு. பனிஸ், பாண், ஜேம்பாஸ் வைக்கும் மேசையோடு ஒன்றிணைக்கப்பட்ட நீள்சதுர சோகேஸ். உள்ளே நீண்ட மேசையும் நீளநீள வாங்குகளும்!

சுபஹு ஐந்துமணியிலிருந்து எட்டுமணி வரையில்தான் அவருக்கு அமோகமாக வியாபாரம் நடக்கும். பிளேன்ரீயும் பாணும் பருப்பும்தான் ஸ்பெஷலும் எல்லாமும்.

"இந்தாங்கொ"- என்று தேநீர் கோப்பையைக் கொடுத்து விட்டு "நீங்க சரியாச் சென்ன காதர்நானா... எந்தநாளும் நானும் நீங்களும் ஒரேமாதிரிதான்" என்றார்.

"மெய் மெய்.. ஆனா எங்களுக்கொரு கொறச்சலு மில்லேன்..-"

"நானும் பாத்துப்பாத்து நிக்கிய.. ஒங்களுக்கு எப்பேக் கன் சான்ஸ் படுகியென்டு .. ம் பட்டா என்னக் கவனிக்கி யதானே-" தமாஷாக கேட்டுவைத்தார்.

"இங்க பாருங்கொ.. நான் கொமரு குட்டிக்காரனா.. இல்ல புள்ள குட்டிய படிப்பிக்கிய செலவா.. ஒன்டுமில்ல.. எனக்கு சான்ஸ் பட்டா ஒங்கள கவனிச்சிட்டுத்தான் மறுவேல"

"ஒங்கட கல்புக்கு அல்லா தருவான்..... அல்லா தருவான்" என்றவர். "அல்லா தருவானா" என்று தனக் குள்ளேயே சிந்தித்துக்கொண்டார்.

"பும்.. பும் ..ர்ர்ர்"

துடித்தெழுந்தார் காதர்நானா. பரபரப்போடு எட்டிப் பார்த்தார். ஆமாம் அந்தப் பெரிய சிவப்பு மோட்டஸைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறந்து போய் நின்றது. ஹெல்மட்காரனின் முதுகு சுமந்திருந்த தோல்பை பொருமியிருந்தது.

பிளேன்ரீக்கு காசு கொடுத்தாரோ இல்லையோ, பைக் நின்ற இடத்துக்கு விசுக்விசுக்கென்று விரையத் தொடங்கினார்.

அதற்கிடையில் ஒரு கட்டைப்போட்டு விட்டு பைக் பறந்தது.

சேப்பைத் தொட்டுப் பார்த்தபடி நெருங்கினார் காதர் நானா. அவர் மட்டுமா..இவ்வளவு பேரும் எங்கிருந்து கிளம்பி வந்தார்கள்.

நான்கு மணிக்கே காதர்நானாவை எழுப்பிவிடும் மந் திரம் இங்கிருந்துதான் உச்சரிக்கப்படுகிறதோ..!

எதிர்பார்ப்புகள் ஏராளமாக மனதில் ததும்ப அந்த பிஸ்மில்லா பெற்றிங் ஸெண்டருக்குள் புகுந்தார் காதர்நானா.

1993.06.07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேசம் மறவா நெஞ்சம்

**ஆ**ஸியாக் கிழவி எண்பது வயதுப் பிரகிருதி. இரண்டு மூன்று மணிநேரத்துக்குமேல் தூக்கம் போவதில்லை. அன்றும் அப்படித்தான். கண்விழித்துவிட்டாள். அந்த இருட்டுக் குள்.. கண்புகைச்சல் குடியமர்ந்துவிட்ட அவளுக்கு என்னதான் தெரியப்போகிறது.

இதுதான் நோய்நொடியென்று திட்டவட்டமாக சொல்லி விட முடியாதபடி..... ஒரு நேரம் மூட்டுமூட்டாக வலியென்றால், இன்னொரு நேரம் இடுப்பு தோள்பட்டை எலும்பெல்லாம் வாதப்பிடிப்பு. ஒரு காலத்தில் சளிப்பிடிப்பும் இருமலுமென்றால் இன்னும் சில நாட்களில் வயிற்றைக் காய்த்துப் போட்டுவிடும்.

என்ன இருந்தாலும் அதிர்ஷ்டக் கட்டை. அவளுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொரு குறைச்சலுமில்லை. பலகைக் கட்டிலில் ஸியெஸ்டா மெத்தைப்படுக்கை.

அவசியமில்லாவிட்டாலும் கூட டேபல்.ஃபேன், தேநீர் ஃபிளாஸ்க். அடுத்த ஹோலில் அவளுக்கும் தெரியக்கூடிய தாக டி.வீ.

அவள் திருமணமாகிக் குடிபுகும் பொழுது வெறும் களிமண் வரிச்சுவீடுதான். பிள்ளை குட்டிகளை பெற்றுப் போட்டதும் இங்குதான். பிள்ளைகள் வளர்ந்து சம்பாதித்து நவீன வீடாக என்ன மாதிரிதான் கட்டிப் போட்டுவிட்டார்கள்.

தூரத்தே எழுந்த வாகன இரைச்சல் படிப்படியாக அதிகரித்து.. வீட்டு முன்பாதையை ஊடறுத்து அவள் செவிப் பறையில் அதிர மோதிக்கொண்டு விரைந்தது. நாலுமணி கொழும்பு பஸ்தான் அது என்பது அவளுக்கு புரிந்துவிட்டது.

"சீ.. ஒத்தராலும் இன்னேம் ஒழும்பல்ல.. இன்டக்கி பெருநாளென்ட நெனவாலுமில்ல.. இந்த பைப்தண்ணி வந்தாப் பொறகு சூத்தில வெயில் புழங்காட்டிம் படுக்கியதான்"- கிழவி மனசுக்குள் புறுபுறுத்தாள்.

பெருநாளென்றால் அது குளிப்புடன்தானே ஆரம்பமா கிறது. ஒருவர் இருவரல்ல; முழு ஊருமே அன்று குளித்து விடவேண்டும். அது லேசுப்பட்ட வேலயா என்ன?

குடிநீருக்கே தவண்டையடித்த கிராமம் அது. ஊருக் குள் எங்கு கிணறு தோண்டினாலும், அது கிவுள் தண்ணி தான். எண்ணி ஒன்றிரண்டு கிணறு கொஞ்சம் பரவாயில்லை. குடிநீருக்காக போக்கடி... பால்வத்த தாண்டி சிங்களப் பகுதிக் குப் போயாக வேண்டும். கிவுள் தண்ணி, ஆக்கிய தண்ணி, குடிக்கிய தண்ணி இப்படி தண்ணீரில்தான் எத்தனை வகை இங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி பெருநாள் வந்துவிட்டால் குளிப்புப்படலம் நள்ளிரவு இரண்டு மணிக்கெல்லாம் ஆரம்பித்துவிடும்.

பெற்றோல் மெக்ஸ். அரிக்கன் லாம்புகளோடு குடும்பம் குடும்பமாக புறப்பட்டுவிடுவார்கள். ஆஸியாக் கிழவியின் கணவன் இப்ராஹிம் நானா இதில் ஒரு முன்னணிப் பேர்வழி. முதல் தண்ணி குளித்துவிடவேண்டுமென்பது அவரது சித்தாந்தம்.

ஒரு கையில் விளக்கும் மறுகையில் தடியொன்றுமாக அவர் முன்னே நடப்பார். தெருநாய்களின் பாய்ச்சலுக்கு தற்பாதுகாப்பாகத்தான் அந்த ஏற்பாடு. எதிர்பார்த்துப்போகும் கிணற்றிலே சலசலப்புக் கேட்டால் அப்படியே இன்னொரு பக்கம் திரும்பிவிடுவார். அவருக்குத் தெரியாத கிணறுகளா அவரோடு பழக்கமில்லாத மனிதர்களா?

பொதுவாக இப்ராஹிம் நானா குடும்பத்தவர்கள் குளிக்கப்போவது பஞ்சோவின் கிணற்றுக்குத்தான். பஞ்சோவுக்கு பெரிய வளவு. ஆனால், சின்னவீடு. அதுவும் களிமண் சுவரும் ஓலைக்கூரையுமான குடிசை. முன்னால் ஒரு கிணறு. பின்னால் ஒரு கிணறு. அந்தக்கிராமத்தின் நாளாந்த தாகத்தை தீர்த்து வைப்பதே அந்தக் கிணறுகள்தான். அந்த நீருக்கு அப்படியொரு குளிர்ச்சியும் சுவையும்.

பஞ்சோவும் இப்ராஹிம் நானாவும் நல்ல நண்பர்கள். முதலிலேயே குளித்துவிடும் இப்ராஹிம் நானா, மரக்குற்றியில் அமர்ந்து பஞ்சோவோடு சிரித்துச் சிரித்துக் கதைத்துக் கொண்டிருப்பார். சில நேரங்களில் இருவருமாக கசட்டையும் கருப்பட்டியும் சுவைப்பார்கள். பஞ்சோவின் மனைவி நொங்கஹாமியும் ஆஸியாவும்கூட நெருக்கமாகிவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றிவர தென்னை மரங்கள். இடையிடையே பலா மரம்... கொய்யா.... கொரகா.... புளியமரங்கள்.... ரம்பைப்பற்றை பார்க்க கண்கொள்ளாக் காட்சி. அவ்வப்போது ஆஸியாவுக்கு பலாக்காய், தேங்காய்கள்கூட அன்பளிப்பாகக் கிடைத்து விடும்.

உம்மா வாப்பாவோடு வரும் சிறுசுகள் குளித்து முடிந்தால், கொறக்கா புளியங்காய் பொறுக்குவதில் நேரத்தைக் கடத்திவிடுவார்கள். குளிக்கவரும் குடும்பப் பெண்கள் அத்தனைபேருக்கும் ரம்பை தாராளமாக...

மாற்றீடாகக் கொடுப்பதற்கு இப்ராஹிம் நானா வீட்டில் மரம்செடிகள் எப்படிப்போனாலும்; புல் பூண்டு முளைக்கக்கூட இடமிருந்தால்தானே? அதற்காக சிநேக பரிமாற்றம் ஒருவழிப் பாதையாக மட்டுமே இருந்து விடவில்லை.

புறுதாக் கந்தூரி, பன்னிரண்டாம் கந்தூரி வந்தால் கிடுகுச் சோறு அனுப்பத் தவறுவதில்லை. பெருநாட்கள் வந்தால் பிட்டு இடியப்பம் கொடுக்க மறப்பதில்லை.

"அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்"

சுபஹுக்கான அதான் வான் அலைகளினூடே கம்பீரமாக எழுந்தது. முக்கித் தடுக்கி ஆஸியாக் கிழவி முதுகை நிமிர்த்தி சுவரோடு சாய்ந்துகொண்டாள். இருட்டுக் குள்ளேயே முக்காட்டை வேறு இழுத்துப் போட்டுக் கொண் டாள்.

பல்ப் ஒளிர்வும் "உம்மா" என்ற குரலும் ஒன்றாக நிகழ்ந்தன.

"ம்.. இப்பவா எழும்பிய.. பெருநாளான்டக்காலும் புள்ள குட்டி நேரகாலத்தோட எழும்போனேன்"- ஆதங்கத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னாள் கிழவி.

"எங்கட காலத்தப்போல பிடதெனி கிரிநெலிக்கி குளிக்கப் பொகவா.. இப்ப ஊட்டுக்குள்ள தண்ணி... நெனச்சி முழிச்சித்தான் எழும்பியொன்டும். கடயாப்பம் சுடுகியத்துக் கெண்டு நானெழும்பின"

ஆஸியாக் கிழவியின் ஒரேமகள் அஸ்மியாதான் அவள். ஆண்பிள்ளைகள் இருவரும் வீட்டைக் கட்டி அவளுக்கு சீதனமாகக் கொடுத்துவிட்டு இடம் பெயர்ந்து விட்டார்கள். அஸ்மியாவுக்கும் இப்பொழுது கல்யாண வயதில் பிள்ளைகள்.

ஆஸியாக் கிழவி கட்டிலோடு கட்டிலாய். பேரன் பேத்தி டிவீயும் டெக்குமாய்.. முழுக்குடும்பப் பொறுப்பும் நடத்துகையும் அஸ்மியாவின் தலையில்தான்.

குசுனிக்குள்ளே கேஸ் அடுப்பு உஸ்ஸென்று எரியத் தொடங்கியது. பிள்ளைகளின் விருப்பத்தேர்வுக்கேற்ப இடியப்பம்.. பிட்டு.. இறைச்சி பிஸ்டேக்.., மீன்குழம்பு.. இத்தியாதிகள் தயாராகிக் கொண்டிருந்தன.

"மகேள் அஸ்மியா"- கிழவிக்கு ஏதோவொரு யோசனை.

"எனத்தியனும்மா.."- குசுனியிலிருந்து அவள்.

"பஞ்சோ்டுட்டுக்கு கடயாப்பம் அனுப்போணும் மகள். மறக்காம போட்டு கெட்டி வைங்கொ.."

"ஆ... சரிசரி நெனவீக்கி"

நேற்று இரவிலிருந்தே பஞ்சோ வீட்டுக்கு கடயாப்பம் அனுப்புவதைத் தவிர வேறெந்த நினைவுமில்லை கிழவிக்கு. வருஷக்கணக்காக நடைமுறையிலிருந்துவரும் விஷயம் அப்படி லேசாக மறக்கப்பட முடியுமா என்ன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது வீட்டுக்குள்ளும் வெளிச்சம் அத்துமீறிப் பிரவேசிப்பதில் ஆர்வம் காட்டியிருந்தது. பாதையில் சலகலப்பு களைகட்டியது. இடைவிடாத வாகன இரைச்சல் இருபுறமும்.

அந்நாட்களில் கால்நடையாகப் பெரும் பகுதியினர் குளிக்கப் போவதற்குப் புறம்பாக, கார்பிடித்துக் குளிக்கப் போகும் ஒரு கூட்டமும் உண்டு. இரண்டு மூன்று மைல் களுக்கப்பால் ஊராகம், கொடகும்புர போன்ற இடங்களுக்குப் போவார்கள்.

நெய்னா மகமதுநானாவிடம் ஒரு பெரிய ஈஎல் கார் இருந்தது. அது ஐந்து மணிமுதல் எட்டுமணிவரை ஒரு ஸ்பெஷல் சேவிஸ் செய்யும். பொடியன்மார்களை சுமந்து கொண்டு அந்தக்கார் "புள்ளபொகுத்துக்காரி" மாதிரி போவதும் வருவதுமாக இருக்கும்.

"ஆ.. இன்னும்மா கடயாப்பம்"

அஸ்மியா இருகைகளாலும் தாங்கிக் கொண்டுவந்து முன்மேசையில் வைத்தபோதுதான் ஆஸியாக் கிழவியின் நெஞ்சிலே ஓர் நிமிர்வு.

"கொதிபால் வெச்சா மகள்?"

"கொதிபால் மட்டுமல்ல.. அவரு கொணுவந்த கேக்கு வாழப்பழமும் வெச்சீக்கி.."

கிழவியின் உள்ளம் குளிர்ந்து போய்விட்டது. இப் பொழுதுதான் பெருநாளின் புத்துணர்வு அவளுக்குள் ஜ்வலித் தது. கூடவே இன்னொரு பிரச்சினை. அதை வேளைக்கு அனுப்பிவிடவேண்டுமே!

அப்போதுதான் சவரில் குளித்துவிட்டு ஈரம் சொட்டச் சொட்ட வந்தாள் பேத்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உம்மும்மா குளிக்கியல்லியா-- கொல்லேல சுடு தண்ணி வெச்சீக்கி"

"குளிக்கோனும்தான் மகள். நீங்களியள் குளிச்சத் துக்கு எனக்கேலுமா... கொஞ்சம் வெயில் வரட்டே.. அது சரிபுள்ள இந்தக் கடயாப்பத்த பஞ்சோடுட்டுக்கு கொஞ்சம் அனுப்பப்பாரே"- என்று வேண்டினாள் இரக்கமாக.

அப்போதுதான் மேசையை உற்றுப் பார்த்தாள் அவள்.

"பெருநாளொண்டு வந்தா ஒங்களுக்கு இருப்பிடமில்ல.. பஞ்சோ பஞ்சோ பஞ்சோ...."- என்று இரைந்தவள் "கெழவி மௌத்தானப் பொறகுதான் பஞ்சோக்கரச்சல் முடீத"- என்று வாய்க்குள் புறுபுறுத்தபடி விசுக்கென்று முன்வாசலுக்கு நடந்தாள்.

இளசுகளின் சுபாவம் இப்படித்தானென்று கிழவிக்கு தெரியாதா என்ன? அவளுக்கு ஐந்தாறு வயசாகும் போதே.. உலகம் புரியுமுன்பே.. ஊருக்கு பைப் வந்துவிட்டது. அதனால் குளிப்புக் கஷ்டமோ குடிநீர்ப் பிரச்சினையோ அவளுக்கு புரியாதுதான். பஞ்சோ போன்றவர்களின் தொடர்பும் அந்நி யோன்யமும் தெரியாதுதான்.

"ஹும்.."-என்று பெருமூச்சு விட்டபடியே அடுத்த மீனுக்கு வலைவீசி நின்றாள்.

மீன் வந்தே விட்டது.

"மகேன் ஒனக்கு நன்ம கெடக்கும் இதக்கொஞ்சம் பஞ்சோடுட்டுக்கு குடுத்திட்டு வாபுள்ள.."

அவசர அவசரமாக எதற்கோ வந்த நஸ்ரீன் உம்மும்மாவின் குரலுக்கு டக்கென்று நின்று நிதானித்தான்.

"நாங்க தொழுதிட்டு ட்ரிப் பொகப்போற உம்மும்மா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு எத்தனயோ வேலீக்கி... தாரச்சரி அனுப்புங்கொ"- பதிலுக்கு காத்திருக்காமல் வந்த வேகத்தில் போயே விட் டான்.

இனி யாருக்குத்தான் சொல்வதென்ற ஏக்கம் அவளு க்கு! கொடுப்பதை நேரகாலத்தோடு கொண்டுபோய்க் கொடுத் தால்தானே பிரயோசனம்.

பஞ்சோவோ இப்ராஹிம் நானாவோ இன்றில்லைதான்.

ஆனால் ஆஸியாக் கிழவியும் நொங்கஹாமியும் இன்று இருக்கத்தான் செய்கிறார்கள். இருவருமே கட்டிலே தஞ்ச மெனக் கிடப்பவர்கள். சென்ற சித்திரைப் பெருநாளின் போது நொங்கஹாமி அனுப்பிய கொகிஸ்.. கொண்டைப் பணி யாரத்தின் மணம் இப்போதும் அவள் மனதை துளைத்துச் சென்றது. எங்களோடு இந்த உறவும் அறுந்து போய்விடுமே என்று துணுக்குற்றாள்.

"உம்மா இது அடுத்தூட்டு அம்ஜது வார கொணு போறதுக்கு.."

கிழவிக்கு சந்தோஷம் பிடிபடவில்லை. அஸ்மியா நிலைமையை உத்தேசித்து தக்க ஏற்பாடு செய்திருந்தாள்.

"மகேன் பஞ்சோடுட்டுக்கு குடுத்திடுங்கொ நான் தந் தெண்டு. பத்திரமா பாத்துப் பொகோணும்... பைஸ்கால போறது கவனம்...."

அவன் அதனை எடுத்துக்கொண்டு போனபோதுதான் கிழவிக்கு மனப்பாரம் இறங்கியது.

"ஏழுமணி பிந்தீட்டு. இனி வாங்கொ குளிக்கியத்துக்கு.."- அஸ்மியா உம்மாவை அழைத்தாள்.

கிழவி கட்டிலுக்கடியில் வைத்திருந்த தடியை தேடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெடுத்தாள். மெல்ல அதனை ஊன்றியூன்றி நடந்துசென்றாள்..
சுடுதண்ணியில் பெருநாள் குளிப்பதற்காக!

1993.10.11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு காலைப் பொழுதின் நகர்வு

அவசரமாக எழுந்து ஓடிவந்து நேரத்தைப் பார்த்தேன். சரியாக ஆறுமணி. செய்தி கேட்கவேண்டும் போலிருந்தது. அதைவிட செய்யவேண்டிய வேலைகள் ஏராளம்.

பிள்ளைகள் இருவரும் ஒருவர் மேல் ஒருவர் புரண்டபடி தாறுமாறாக நல்ல தூக்கம். இப்போதே எழும்பிவிட்டால் தேத்தண்ணி போடும்வரை சிணுசிணுத்துக்கொண்டிருப்பார்கள்.

சீ.. பாங்கு சொல்லும்போதே முழிப்பு வரத்தான் செய்தது. சில்லென்ற குளிர்வேறு. கொஞ்ச நேரம் போகட்டு மென்று மனம் சொன்னது. சைத்தான் தூக்கம் யாரைத்தான் விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நிமிஷத்தினதும் பெறுமதி இப்படிப்பட்ட காலைப் பொழுதுகளில்தான் தெரிகிறது. குசுனிக்குப்போய் டக்கென்று லைட்டைப் போட்டேன். குடத்து நீரைக் கோப்பை நிறைய வார்த்து ஹீட்டரைப் போட்டுவிட்டுக் கதவைத் திறந் தேன். இன்னுந்தான் வெளி லைட் ஒளிர்ந்து கொண்டிருந்தது. மீண்டும் சுவிற்ச் வரை ஓர் ஓட்டம்.

ஒன்றுக்கிருந்துவிட்டு கவிழ்த்துவைக்கப்பட்டிருந்த வாளி யை தூக்கிக் கொண்டு கிணற்றடிக்குப் போனேன். முகத்தைக் கழுவி வாளித் தண்ணீரோடு வந்து சேர்ந்தேன்.

நீர் அள்ள அலுமினியம் கோப்பை, சவர்க்காரப் பெட்டி, பேஸ்ட், பிரஷ் எல்லாம் கொண்டு வந்து பிள்ளைகளுக்கு வசதியாக படிக்கட்டில் வைத்துவிட்டு மீண்டும் குசுனிக்குள் புகுந்தேன்.

தண்ணீர் தமதமவென கொதித்துக் கூத்தாடிக் கொண் டிருந்தது.

சின்னச்சின்ன அலம்பல் வேலைகளுக்கு வசதியாக பிளாஸ்டிக் பேஸனில் அரைவாசி தண்ணீர் வார்த்தெடுத்தேன். பிளாஸ்டிக் ஜொக், கிளாஸ், தேயிலைவடி இவற்றை பீங்கான் ராக்கையிலிருந்து அடுக்கி வந்து முதற்படியாக அவற்றை அலம்பிக்கொண்டேன்.

ஹீட்டர் தண்ணீர் இன்னுந்தான் கூத்தாடி ஆரவாரித்துக் கொண்டிருந்தது.

அலுமினிய ஜொக்கில் தேயிலை இரண்டு கரண்டி அள்ளிப்போட்டேன். என்கர் டின்னைத் திறந்து பிளாஸ்டிக் ஜொக்கில் மாவை அள்ளிப் போட்டபோது சீனி போத்தல் சிரித்தது. ஏழு கரண்டி எண்ணிப் போட்டேன்.

இனியென்ன சுவிற்சை ஓ.ஃ.ப் பண்ணி, தேயிலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திரம் நிறையுமட்டும் கொதிநீர் ஊற்றிய போது தேயிலைத் தூள் ஓடிவிளையாடி ஒரேயடியாக செந்நீராய் மாறிவிட்டது. அடுத்த ஜொக்கில் சிறிதளவு நீருற்றி கடகடவென அடிக்கத் தொடங்கினேன். மாவும் சீனியும் ஒன்று கலந்து கரைந்து பாகாய் மாறியது.

தேயிலை வடியால் கவனமாக கசட்டையை வார்த்த போது எல்லாம் ஒன்று கலந்து பால் தேநீர் உருவாகியது. மீண்டும் பலதடவை அடித்தபின் கரண்டிக்கு அள்ளியூற்றி ஊதிச் சுவைபார்த்தேன். இன்னும் கொஞ்சம் சீனி இல்லா விட்டால் பிள்ளைகள் எங்கே குடிக்கப் போகிறார்கள்.

இந்தத் தயாரிப்பின் முதல் சுவைஞன் நானாயிற்றே. ஒரு கிளாஸ் தேநீரை நேரநெருக்கடிக்கு மத்தியிலும் அமைதி யாகக் குடித்தபோதுதான் உடலுக்கு ஒரு தெம்பு.

இனி, பிள்ளைகளை எழுப்பவேண்டுமே. தேநீர் தயாரிப் பில் எப்படியும் இருபது இருபத்தைந்து நிமிடம் போய்விடும். உண்மைதான் ஆறும் இருபது.

“ஆ...ஆ.. எழும்புங்கொ எழும்புங்கொ ஸ்கூலுக்குப் பொகோணும்.”

எழும்புவார்களா? சோம்பல் முறித்தபடி மறுபக்கம் புரண்டுபடுத்துவிட்டார்கள்.

“ஹ்ம்.. ஆறரயாகீட்டு டக்கென்டெழும்புங்கொ”

சின்னவன் கண்களை இறுக்கிக்கொண்டு கைகளை உயர்த்தினான். அப்டியே தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு வந்து வெளியே விட்டேன்.

“மூத்தரம் பேஞ்சிட்டு வாயக் கழுவிக் கொண்டு வரோணும்”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எழும்புங்கொழும்புங்கொ அது தம்பீம் எழும்பிப் பெய்த்த"

தூக்கி நிறுத்தினேன் அவனை. கண்களைக் கசக்கிய படி தள்ளாடி நடந்தான்.

தலையணைகளை ஒவ்வொன்றாக எடுத்து மூலையில் அதற்கென்று வைத்துள்ள கதிரையில் அடுக்கினேன். சின்னவன் போற்றிப்படுத்த பிடவை நனைந்து காய்ந்து மெல்லிய நாற்றமடித்தது. பத்துமணிக்குப்போல் கழுவிப் போடுவதற்காக ஒரு பக்கமாக வைத்துவிட்டு இரண்டு பாய்களையும் ஒன்றின் மேலொன்றாக வைத்து சுருட்டினேன்.

கட்டில் பெட்ஸீட்டை உருவியெடுத்து கதவில் விரித்துப் போட்டு, மெத்தையை ஒரு பக்கமாக உயர்த்தி இரண்டுக்கு மடித்துவிட்டேன்.

பிள்ளைகளாவது கொஞ்சம் சுகமாகத் தூங்கட்டுமே யென்று மெத்தையில் படுக்கவிட்டால், முழிப்பு வந்ததும் பாய்க்கு வந்து என்னோடு சுருண்டு கொள்வது பழக்கமாய்ப் போய்விட்டது.

"தேத்தண்ணீ..ய்"

"வார வார"

இருவருக்கும் பெரிய பெரிய கிளாஸ் இரண்டில் தே நீரை ஊற்றிக் கொடுத்தேன். அதற்குப் பிறகுதான் அவர் களைப் பொறுத்தமட்டில் அடுத்தவேலைகள்.

இனி, காலைச் சாப்பாட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமே.

"குடிச்சா.. ஆ.. கிளாஸத்தாங்கொ. இன்ன சல்லி, சீக்கிரம் பெய்த்து பாண் ஒன்னேறாத்தல் கொணு வாங்கொ.. இது சொபிங் பேக்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளிக்கொண்டோடினான் மூத்தவன்.

"புள்ள பெய்த்து பல்லவெளக்கி மொகத்தக் கழுகுங்கொ.. சௌக்காரம் போட்டுக் கழுகோணுமா"

இரவுப் பருப்புச்சட்டி தயாராக இருந்தது. பருப்புத்தானே பிள்ளைகளுக்கு விருப்பக்கறி. பருப்பை அடுப்பில் வைத்தேன். கேஸ் அடுப்பு எவ்வளவு பெரிய உதவி.

பாயை விரித்து தண்ணீர் வைக்கும் போது பாண் வந்து சேர்ந்தது. அதனை வெட்டித் தயார் படுத்துகையில்..

"என்னக் கழுகுங்கொ"

சின்னவன் கக்கூஸ்"க்குள்ளிருந்து கத்தினான். அவனைத் துப்பரவு செய்துவிட்டு வரும் போது பருப்பின் பதம் மூக்கைத் தொட்டது. அடுப்பை நூர்த்து ஆறவிட்டேன்.

"ஏன்ட களிசன் எங்கியன்?"

"ஒரெடத்தில வெக்கோணேன். ஸ்கூலுட்டு வந்தா கழ்ட்டி வீசிய.."-

பிடவை ராக்கை .. கொடி.. கட்டிலடியெல்லாம் பம்பரமாய்ச் சுற்றிப் பார்த்தேன்.

"ஆ .. இதீக்கி.. டக்கென்டு போட்டுக்கொணு வாங்கொ பாண் தின்ன"

பருப்பை பீங்கானில் போட்டுவைக்கும் போதே சின்னவன் வந்தமர்ந்துவிட்டான்.

"எங்கியன் சீக்கிரம் வா புள்ள.. தின்டிட்டா லேசி"- மூத்தவனையும் கூப்பிட்டேன்.

"எனேத் தின்னேல.. கொணுபொகத்தாங்கொ"

"எனத்தியென்டா இது. ஒரு நாளைக்கித் தின்னிய ஒரு நாளக்கி கொணுபோற.. கரச்சலொண்டு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய டிபன் பொக்ஸைத் தேடி... அதனைக் கழுவித் தயாரித்துக் கொடுக்க அதற்கென்றொரு நேரம் எடுத்துவிட்டது.

"எனேப் போதும்"- சின்னவன் எழுந்து விட்டான்.

"எனத்தியன்புள்ள இது ஒரு துண்டு தானே தின்ட.- பதினொரு மணியாகம் காட்டீம் நிக்கோணுமேன்"

பருப்புப் பீங்கானை மூடி பாணை சொப்பிங் பேகில் போட்டு, பாயைத் தட்டிச் சுருட்டிவிட்டு எழுந்தேன்.

இதற்கிடையில் எப்படியோ ஏழும் இருபதாகிவிட்டது.

"ஆ.. சீக்கிரம் உடுங்கொ"

"இந்த சப்பாத்தப் போட்டுடுங்கோ"

"எனத்தியனிது நாலாமாண்டு படிக்கிய... இன்னேம் சப்பாத்த போட்டுக்கொளத் தெரிய, அதப்பாரே தம்பி எவளவு பஸந்தா போட்டீக்கன். ம்... களிசன்ட ஸிப்ப இழுத்துக்கோ..."

அதற்கிடையில் சின்னவன் முன்னேபோய் ஸ்கூல் பேக்கை தயார்படுத்திக் கொண்டிருந்தான்.

"ஏன்ட பென்ஸல்ட கூரொடஞ்சி"

"எங்கியன் அந்த பிளேட்டு.. வெச்செடத்தில இல்ல. ஒரொரு சாமனேம் அந்தந்தெடத்தில வெச்சாத்தானே அவசர மான டைமுக்கு தேடிக்கொளேன்ட.."

"இதீக்கி மேசப் பொடவக்கடீல"

"ஆ நான் சீவியன் .. பென்ஸல பனிய புழாம வெச்சிக்கொளோணும்.. புழுந்தா குச்சி ஒடயித.. கட்டர் வாங்கித்தந்தா இல்லாப் போடிய.. ஆ.. இந்தாங்கொ"

அப்பாடா.. இருவரும் பேக்கைக் கழுத்தில் போடும் போது ஏழரை பிந்திவிட்டது. எப்போதுதான் நேரத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்கூல் போனார்கள். என்னதான் போராட்டம் செய்தாலும் எப்படியோ நேரம் கடந்துவிடுகிறது.

சின்னவன் பூசிக்கொண்ட பௌடர் நெற்றியில் செறிவாகப் படிந்திருந்தது. இருவர் தலையிலும் நேற்றுத் தடவிய எண்ணெய்தான். கொலோன் இருந்த போதும் கொஞ்சம் தெளித்துவிட நேரம் வாய்த்தால்தானே!

“சரி சரி சீக்கரம் போங்கொ.. ஏத்தியன் பாத்துக்கோ நிக்கிய”

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துச்சிரித்துக் கொண் டனர்.

“சல்லி”

“ஆ.. அதுமட்டும் மறந்துபோறல்ல.. இந்தாங்கொ அஞ்சுருவீக்கி.. மாத்தி புள்ளக்கி ரெண்டுருவக் குடுக் கோணுமா..”

“ஆய்-- எனக்கு மட்டும் ரெண்டுருவ.. நானக்கு மூனுருவ..”- சின்னவன் சிணுங்கத் தொடங்கினான்.

மாற்றுக்காசு ஒரு ரூபா கைவசம் இருக்கவில்லை. எங்குபோவது?..

“சரி புள்ளக்கி பளிக்கொடத்துக்கு பொகச் செல்லே ஒருவக்கூடத்தாரனே...”

“தராட்டி நான் பளிக்கொடத்துக்கு போறல்ல..”- ஒப்பந் தத்தை முடித்து அவன் தயாராகிக் கொண்டான்.

“சல்லி கொணுபோற சரி இந்த கூலைஸ் அப்பிடிப்பிடி நஜீஸியல தின்னியல்ல.. மறுக பௌத்து நோவு அது இதென்டு செல்லப்படாது”

இது ஒவ்வொருநாளும் சொல்லும் உபதேசம்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதையெல்லாம் அவர்கள் காதில் போட்டுக் கொண்டால் தானே!

"வாப்பா.. நாங்க போற"

இருவரும் கையசைத்து விடைபெறும் காட்சியை ரசித்து விட்டு திரும்பிய போது நேரம் ஏழும் நாற்பதைக் காட்டியது.

**1994.01.05.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# படித்த மனைவி

மனம் மகிழ்ச்சியால் மலர்ந்திருந்தது. எதிர்காலக் கற்பனையில் மூழ்கியபடி சாய்ந்திருந்தாள் ஸாஜிதா. படிப்பில் அவளுக்கொரு பிடிப்பு. அதன் இருகட்டங்களை வெற்றிகர மாகத் தாண்டியிருந்தாள்.

"ஸாஜிதா"- நேயமான ஒரு குரல் வெளியே ஒலித்தது.

ருஸ்தாவின் குரல்தான் என்ற நம்பிக்கையோடு எழுந்து எட்டிப் பார்த்தபோது மேலும் மகிழ்ச்சி குலுங்கியது.

"வாடிவா"- என்று காம்பராவுக்குள்ளிருந்து குரல் கொடுத்தாள்.

"நீ பாஸாமென்டு கேள்விப்பட்ட"- கைகளைப் பற்றி அழுத்தி தன் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வகுப்புத்தான் வித்தியாசமாக இருந்தாலும் இருவரும் உயிர்த்தோழிகள்.

"நான் தொடர்ந்து படிக்கத்தான் புரியம்"- ஸாஜிதா ஆயிரம் அர்த்தங்களை உள்ளடக்கிச் சொன்னாள்.

"அப்ப கெம்பஸ் போற யோசினயா?" ருஸ்தா கேட்டாள்.

"பீ... டு... ஸீ... எஸ்தானே.. அவளது மாக்ஸ் கெடக்கியல்ல.. ஜீஏகியூ ரெஜிஸ்டர் பண்ணிப்போட்டு வேறெனத்தியாலும் படிக்கேலும்"

"இந்தக் காலத்தில படிப்புக்கு பஞ்சமில்லாதானே.. கொம்பியூட்டர் செஞ்சா நல்லம்"

"படிப்பு படிப்பெண்டு சுத்தித்திரிய உம்ம வாப்ப உடு கியல்ல"

"ஓடி... அவங்களுக்கு இது பெரிய கரச்சல்தான். இப்பவே கலியாணம் பேசியோ தெரிய..."

"சரியாச் சென்ன, அந்தக் கரச்சலுக்குத்தான் படிக்கோணுமெண்டிய"

"நீ மூத்தபுள்ள ஒனக்கெண்டா தப்பக் கெடக்கியல்ல"

"இப்பதான் பத்தொம்பது வருஷம். நான் கெழவியாகீட்ட மாதிரி அவங்கட யோசின"

இரண்டு இளமனசுகளின் இதய தாபங்கள் நீண்ட நேரமாய்..! அமர்ந்திருந்தவர்கள் வசதியாகச் சாய்ந்தபடி ஒரு கருத்தரங்கையே நடாத்திக் கொண்டிருந்தார்கள்.

****

"ஸாஜிதா..."

வாப்பாவின் குரலைக்கேட்டு காம்பராவுக்குள்ளிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடி வந்தாள் ஸாஜிதா. வாப்பாவின் கையில் ஒரு நீண்ட உறைக்கடிதமிருந்தது.

"அரசாங்க காயிதமொண்டு போலீக்கி"- வாப்பா வியப் போடு கேட்டார்.

அதைக் கையிலெடுத்த போதே எதற்காக எங்கிருந்து வந்திருக்கிறதென்று விபரம் புரிந்துவிட்டது அவளுக்கு!

"டீச்சிங் சோதினக்கி எப்ளிகேஷன் போட்ட.. எட்மிசன் காட் வந்தீக்கி வாப்பா"

அவருக்கொரு அலாதியான சிரிப்பு.

"டீச்சர் வேல எனத்துக்கன் புள்ள எங்களுக்கு"

இதெல்லாம் வசதி இல்லாதவர்கள் பார்க்கின்ற.. பார்க்க வேண்டிய தொழில் என்பதுபோல் அவரது பேச்சு அமைந்தது. ஏதோ பெரிய வசதிகள் வாய்க்கப் பெற்றவர் போன்ற நினைப்பு அவருக்கு! கொஞ்ச நிலபுலனும் ஒரு ஜவுளிக்கடையும் ஸம்ஸம் ஊற்றா என்ன?

"படிச்சத்துக்கு ஒரு பொரோசனம் தேவதானே வாப்பா"

"அதியள நான் நம்பில்ல மகள்.. புள்ளயள் படிக்கோணுமென்டுதான் படிப்பிச்ச. அல்லாஹ் எங்களுக்கு கொறயொன்டும் வெச்சில்ல"

வாதாடி தன்கட்சியை நிலைநாட்ட வேண்டும் போலிருந் தது அவளுக்கு ! வாப்பாவையும் அவர் போக்கையும் அறியா தவளா அவள்.

"எனத்தியன் வாப்பாம் மகளும் கதயாயீக்கி?"- உள்ளே யிருந்து அவளது உம்மா வந்தாள்.

"ஒங்கட மகள் டீச்சர் வேல எடுக்கப்போறாம்" ஒருவித சிரிப்போடு வாப்பா சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கட குடும்பத்தில எல்லாருமே கடயாவாரியள். டீச்சரொன்டும் வந்தா நல்லந்தானே"

உம்மாவின் பதில் அவளுக்கு ஒரு வகையில் வெட்க மாகவும் இன்னொரு வகையில் உற்சாகமாகவும் இருந்தது. அதுதான் சந்தர்ப்பமென்று அங்கிருந்து மெல்ல நழுவினாள்.

"மகள் டீச்சர் வேலயெடுத்தா மாஸ்டர் மருமகன்தான் தேடவாகும். ம்.. கோமேந்து ஜொப்காரனியளட சம்பளம் எண்ணிச் சுட்ட பணியாரம் மாதிரி...இது எங்களுக்கு சரிவாரா?"

"அதெல்லாம் அல்லா எழுதி வெச்சமாதிரி நடக்கும்"

கணவனையும் சமாளித்து மகளின் மனதையும் நோவிக்காமல் இதைவிட வேறென்ன பதிலைத்தான் சொல்ல முடியும்!

"எட்மிஷன் காட் வந்தொடன இப்பிடி... வேல கெடச்சா எப்பிடீக்கும்"- என்று நினைத்தபடியே கட்டிலில் புரண்டாள் ஸாஜிதா.

****

திருமணச் சந்தையில் பரபரப்பாகப் பேசப்பட்டாள் ஸாஜிதா. கொழுத்த இடத்தில் அவளை கட்டிக்கொடுத்து அந்தக் காட்சியை பார்த்து ரசிக்க அவளது வாப்பா பகீரதப் பிரயத்தனம் செய்தார்.

"மகள் குளிச்சிக்கிளிச்சி கொஞ்சம் ரெடியாகி நில்லுங் கொ...-"உம்மா பேச்சிவாக்கில் சொல்லிச் சென்றாள்.

திருமண விடயமாக இன்றும் யார்யாரோ வரப் போகிறார்களென்று அவளுக்கு விளங்காமலில்லை.

மிகுந்த ஆர்வத்தோடு வெளிவாரியாக ஜிஏகியூ படிப் போமென்று எடுத்த முயற்சியும் இடையில் நசுங்கிப் போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது. நாலைந்து வகுப்புகளோடு அதுசரி. டீச்சிங் எபொய்மெண்டுக்கு இரண்டாவது தடவையாக எழுதியும் இன்னும் பெறுபேறு எதுவுமில்லை. மற்றப் பரீட்சைகளைப் போல் குறித்த காலத்தில் முடிவு வெளியிட வேண்டு மென்றில்லையே. இரண்டில் ஏதாவதொன்று சாத்தியமாகியிருந்தாலும் இன்னும் கொஞ்ச காலத்தை இழுத்தடித்திருக்கலாம்தான்.

"ஸாஜிதா எனத்தியனிது... ரெடியாகி நில்லுங்கொ"- என்றவாறு அவளது மதினிக்காரி வந்து புகுந்தாள்.

கொஞ்சநாட்களாக இந்தத் திருமணப் பேச்சு சூடு பிடித்துத்தானிருந்தது. வாப்பாவோடு வியாபாரத் தொடர்பானவர்கள். அஹுங்கல்ல தனியார் விலங்குக் காட்சிச் சாலைக்கு வீட்டாரெல்லாம் போய், அங்கே பெண் பார்த்து.. மாப்பிள்ளை பார்த்து.. இதையெல்லாம் அவள் மறந்து போய்விடவில்லை.

இன்று சம்பிரதாய பூர்வமான பெண்பார்க்கும் படலம். இனி அதற்காக அவள் தயாராகித்தான் ஆகவேண்டும்.

****

ஆசிரியர் தேர்வுக்கான போட்டிப் பரீட்சையில் அவள் தெரிவுசெய்யப்பட்டிருந்தாள். நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பு வந்திருந்தது.

"கலியாணத்துக்கு நாள் குறிக்கியது மட்டுந்தானீக்கி. மத்த எல்லம் ரெடி. இப்ப இந்த இன்டவீக்கி எனத்துக்கன் புள்ள போற?"- வாப்பா ஓரேயடியாக மறுத்துநின்றார். அவளது நீண்டநாள் ஆசை பொருத்தமற்ற சந்தர்ப்பத்திலேயே கை கூடியிருந்தது.

"எனக்கு ஒரு நாளக்கிச்சரி டீச்சர் வேல செய்யோணுமென்ட ஆச"- குழநதைபோல் ஸாஜிதா தன் மனதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தினாள்.

அவளைப் பார்க்க வீட்டில் ஒரு சாரார்க்குப் பாவம் போலிருந்தது.

"அப்ப அவள் பொகட்டே.. கலியாணம் புடிச்சங்காட்டிம் ஒரு கெழமசரி பொகட்டும்-" உம்மா ஒரு யோசனையை முன்வைத்தாள்.

அது அவளுக்கொரு பிடிகயிறாய் அமைந்தது.

நேர்முகப் பரீட்சை நடந்து ஒரு கிழமையிலேயே அவளுக்கு உள்ளூர்ப் பாடசாலைக்கே நியமனம் கிடைத்தது.

ஒரே நாளில் பல ஆயிரங்களை எண்ணும் மாப்பிள்ளைக்கு ஒரு மாதத்தில் சில ஆயிரங்களை மட்டுமே எண்ணுவது எப்படிப்பிடிக்கும்? அது எப்படிப்போனாலும் ஒரு கௌரவக் குறைச்சலாகவும் அமைந்ததோ என்னவோ!

"மாப்பிளக்கி கொஞ்சமாலும் புரியமில்லயாம் தொழில உடட்டாம்.."

எட்டே நாளில் அவள் காதில் வந்துமோதிய அதிர்வு இது. அவளால் அதை தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. இதென்ன அத்துமீறிய ஆதிக்கமென்று மனதுக்குள் குமைந்து வெடித்தாள்.

"இதக் கையுடாட்டி எங்களுக்கு கலியாணத்துக்கு டேட் போட்டுக்கொளேம் கரச்சலாகும்"- வாப்பா மிகுந்த வேதனையோடு பிரஸ்தாபித்தார்.

அவள் ஊமைத் துயரில் ஆழ்ந்து போனாள்.

****

ருஸ்தா அன்று வந்திருந்தாள்.

ஸாஜிதாவுக்கு தன் மனச்சுமையை இறக்கி வைக்கக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்த வாய்ப்பு.

"ரெண்டு விஷயத்துக்கு ஒனக்கு விஷ்பண்ணத்தான் வந்த"

"மெய்யா"

"ஒன்ட ஆசபோல டீசர் வேல கெடச்சிட்டு. மத்தது மாப்பிளேம் கெடச்சிட்டு-" கலகலவென்று சிரித்தாள் ருஸ்தா.

"ரெண்டும் ஒரே நேரத்தில எனக்கு கெடக்காது. ஒன்ட உட்டாத்தான் ஒன்டு கெடக்கும்"- இதைச்சொல்லும்போது ஸாஜிதா அழுதேவிட்டாள்.

"ஸாஜிதா.. ஒன்ட மனச நான் நோவிச்சிட்டாடி....?"

அவள் எழுந்து சென்று ரூம் கதவைப் பூட்டிவிட்டு, டயறிக்குள்ளிருந்து கடிதமொன்றை எடுத்து அவளுக்கு நீட்டி னாள். கடிதம் இதுதான்.

அன்புடையீர்,

திருமணத்தையும் தொழிலையும் ஒரேநேரத்தில் ஏற்றுக்கொள்ளவே நான் விரும்புகிறேன். ஆசிரியத் தொழி லைக் கைவிடுமாறும் அப்படி விட்டால்தான் திருமணமென்றும் சொல்லியிருக்கிறீர்கள்.

எனது நீண்டநாள் தவம் - இலட்சியம் ஆசிரியப் பணி என்கையில் கிடைத்திருக்கிறது. நான் சுதந்திரமாகவும் சுயகௌரவத்தோடும் ஒரு மனைவியாக வாழவே விரும்புகி றேன். இதற்கு நீங்கள் தடையென்றால், தயவுசெய்து இந்த விவகாரத்தை விட்டுவிடுங்கள். என் விருப்பத்துக்கு அனு சரணையான ஒருவன் எனக்கு எங்காவதிருப்பான்.

இப்படிக்கு
ஸாஜிதா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஸாஜிதா! எனத்தியன்டீ இது. ஒனக்குப் பெய்தியமா?" உணர்ச்சி வசப்பட்டு ருஸ்தா கேட்டாள்.

"ஒனக்கு மட்டுமல்லடி எல்லாருக்குமே இது பெய்தியம் மாதிரிதான் தெரீதொன்டும். நீ எனக்கு செய்யோன்டிய ஒதவி.. இத எப்பிடிச்சரி கொணுபெய்த்து போஸ் பண்ணு"

அந்தக்கவரிலே முகவரி எழுதப்பட்டு முத்திரையும் ஒட்டப்பட்டிருந்ததை அப்பொழுதான் ருஸ்தா கவனித்தாள்.

அதை அவள் எப்படி மறுப்பாள்? அவளுக்குள்ளும் பல புதிய சிந்தனைகள் சுடர்விடத் தொடங்கியது.

1994.07.05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வற்றாத ஊற்று

எல்லாம் சேர்த்து ஐநூறு அடி பரப்புக் கொள்ளாத சின்னஞ்சிறு வீடு. சீமெந்துத் தளமும் சுவரும் தகரக்கூரையு மாக. வீட்டைவிட ஏழெட்டுப் பரப்பு பெரிய சுற்றாடல், அடக்க மாக வேலியடைக்கப்பட்டிருந்தது. அந்த வீட்டுத் தோட்டத் திலே கொய்யா, பலா, வாழை மரங்கள். அதிலே சுதந்திரமாக ஓடிவிளையாடும் அணில்கள். பறந்து அமர்ந்து பழந்தின்னும் பறவைகள்.

சிறிய திண்ணையில், நாலைந்து மடிப்பு விரித்து பாய்போட்டு அதிலே கால்களை நீட்டி, பஞ்சுத்தலையும் சிவந்த வாயுமாக அமர்ந்திருந்தாள் ஃபுக்கர தாத்தா. பக்கத் திலே வெற்றிலைச் செப்பு தயாராகவே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுப் படிக்கட்டில் ஒய்யாரமாக அமர்ந்திருந்தாள் ஸிராஸா. மிக நேர்த்தியாக உடுத்தி தலைவாரிப் பின்னி யிருந்தாள். கிராமியத்திற்கு அப்பாற்பட்ட தோற்றம் அவளில் வெளிப்பட்டது. ஸ்ரீ லங்காவிற்கும் சவூதிக்கு மிடையில் பலமுறை பறந்து பழகியவளாயிற்றே.

"எத்தினயோ பைணம் பொற நாட்டுக்கு போன வந் தென்டு ஒங்கட உம்ம வாப்ப- ஊடு வாசலயாலும் பாத்துக் கேட்டு கெட்டிக்கொண்டா" ∴புக்கரதாத்தா பச்சாதாபப் பட்டுச் சொன்னாள்.

"ஓ மாமி.... எல்லாரும் ஒண்டுச் சேந்து கொண்டு தின்னியேம் குடிக்கியேம் மட்டுந்தான் மிச்சம். ஆறு வருஷமா அடித்தளாம் மட்டுந்தான் போட்டீக்கிய"- தனது மனக் கச்கி சத்தையும் ஸிராஸா கொட்டி வைத்தாள்.

"எனக்கும் ஒன்னப்போல ஒரு கொமரீந்தா இந்த மட்டுக்கு ரெட்டத்தட்டு கெட்டீக்கேலும். அந்தப் பொடியனும் எத்தினயோ மாதிரி பொகப்பார்த்த ஆம்புளயள் போறென்டா இருவது முப்பதோணுமாம்-" கிழவி ஆதங்கத்தோடு முறைப் பட்டாள்.

ஆயிரம் எண்ணங்கள் ஸிராஸாவின் நெஞ்சுக்குள் ளிருந்து வந்து குதிப்பதுபோலிருந்தது. "இந்த ஊட்ட நல்ல பஸந்தாக் கெட்ட நான் சல்லி அனுப்பியனே" என்று சொல் வதா? இல்லை "நான் பெய்த்து ஒங்கட மகனுக்க டிகேட் அனுப்பியவன்" இப்படிச் சொல்வதா? எப்படியுமே அவளால் சொல்லிக்கொள்ள முடியவில்லை.

அதற்கிடையில் ரியாஸ்கான் சொப்பிங் பேக் நிறைய காய்கறி, பழங்களோடு வந்து சேர்ந்தான். அவள் சிரித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டெழுந்து சுவரோடு சாய்ந்து நின்றாள்.

"எனத்தியன் ரெண்டுபேரும் கத?-" அவன் மௌனத்தைக் கலைத்தான்.

"இந்தப் புள்ளக்கி நான் புத்தி சென்ன"- ஃபுக்கரதாத்தா உண்மையைச் சொன்னாள்.

"எனத்தியன் போனவிஷயம்"-அவள் ஆவலோடு கேட்டாள். அவன் ஒன்றும் சொல்லாமல் மெல்லச் சிரித்தான்.

"ஜோடு போறென்டா லேசாப் பொகேலும்"- அவளுக்கு மட்டும் விளங்கக் கூடியதாக சொல்லிவிட்டு உள்ளே போனான் ரியாஸ்கான்.

"அஸராகீட்டு நான் போற மாமி"- என்றவள் நிலத்தில் கால் படாதவளாக மெல்ல இறங்கினாள்.

"இவளவு நேரமும் நின்டத்த கோப்பி கொஞ்சம் குடிச்சிட்டு பொகேலேன்"- என்றபடி எழுந்தாள் ஃபுக்கரதாத்தா.

"வந்தும் மிச்சம் நேரமாகீட்டே. நான் நளக்கி வாரனே"

கேற்றை மூடியவள் அருகே படர்ந்திருந்த மல்லிகைப் பந்தலிலிருந்து இரண்டு மூன்று பூக்களை கொய்து கொண்டு நடந்தாள். அதன் நறுமணம் அவள் மனமெங்கும் வாசம் பரப்பியது.

****

ஜமால்நானா அப்போதுதான் வந்திருந்தார் போலும். அவர் வாயிலிருந்து என்ன முத்து உதிரப் போகிறதென்று எதிர்பார்த்தபடி மனைவி, பிள்ளைகளெல்லாம் சூழ்ந்து நின்றனர். அந்த நேரம் பார்த்துத்தான் ஸிராஸாவும் அங்கே புகுந்தாள்.

"நல்ல ஏஜென்ஸி. ஒரு கெழமேல அனுப்பியென்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ன. நாளக்கே பாஸ்போட்ட கொணுவந்து தரட்டாம்-" வாப்பா பெருமிதத்தோடு சொன்னார்.

"எந்தநாளும் பெய்த்துப் பெய்த்தீக்கேல. இன்னம் ரெண்டு வருஷம் நின்டிட்டு வந்தாப் போதும்"- கனவுகளில் மிதந்தபடி அவளது உம்மா ஹுஸைம தாத்தா சொன்னாள்.

அவளுக்கு அழுகை வரும் போலிருந்தது. ஆனாலும் அடக்கிக் கொண்டாள்.

"சாச்சீ நீங்க மறுபேணம் சவூதிக்கு பொகப்போறா.. எனக்கு சுவிங்கம் அனுப்புங்கொ-" அவளது சகோதரியின் ஐந்து வயது மகள் மடிக்கே வந்துவிட்டாள்.

"தாத்தா எனக்கும் இருவத்தையாயிரம் அனுப்புங்கொ. நானும் சவூதி பொகப்போற. ரெண்டு வருஷம் நிக்கத்தேவில்ல. நான் போனொடன நீங்க வாங்கொ"- பெரிய கெட்டித்தனம் போல் இருபது வயதுத் தம்பி சிஹானின் வேண்டுகோள்.

அவளுக்கு பொறுமையாய் இருந்து கொள்ள முடியாது போலிருந்தது.

"தாரு போனாலும் வேலில்ல. இன்னேம் ஊட்டயாலும் கெட்டிக்கொளல்ல...." நிதானமிழக்காமல் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டாள் ஸிராஸா.

"அதுதான் அடித்தாளம் போட்டொடன தாத்தட கலியாணம் வந்த. நாங்க சும்ம செலவழிச்சிப் போடல்லேன்"- ஹுஸைமதாத்தா சமாளித்துப் பேசினாள்.

ஏதோ வீடு வாசலுள்ள மாப்பிள்ளையென்று அள்ளிக் கொடுத்ததும் இன்றுவரை இங்கேயே ஒட்டிக் கொண்டிருப்பதும் இடைவிடாமல் மூன்று பிள்ளைகளைப் பெற்றுப் போட்டதும் சலனப்படமாய் அவளுக்குள் விரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செலவு வலுவு இப்ப முந்தியப் போலயா.. எல்லம் நெருப்பு வெல. எவளவு சம்பரிச்சாலும் போத-" ஜமால் நானா பெரிய சம்பாதிப்பாளி போல் கருத்துரைத்தார்.

வாப்பா-மச்சான்-இரண்டு தம்பிமார் இப்படி நான்குபேர் சம்பாதித்தும், இந்தக் குடும்பம் செலவுக்குப் போதவில்லை என்பது அவளுக்கு வெறும் வேடிக்கையாகவே தெரிந்தது.

"ஐசும்ம தாத்தட பேத்தியப்பாரே பதினேழு வருஷத்தில கள்ளப் பாஸ்போட் சரிக்கட்டிக்கொண்டேன் டுபாய் போன. இப்ப அசடாய் பெய்த்தா பத்து வருஷமா நிக்கிய தானே. ரெண்டு கொமரு குடுத்து.. ஊடுவாசல் கெட்டி.. தம்பிமார் கடவெச்சி யாவாரம் பண்ணல்லயா.. ஒன்ட பேர்வளெங்க ஊட்டயாலும் கெட்டிக்கொள பல்லக் கடிச்சுக்கொண்டு நின்டிட்டு வாயே-" உம்மாக்காரி ரொம்ப லேசாகச் சொல்லி விட்டார்.

ஆவேஷமாக எழுந்து வீட்டாருடன் சண்டை பிடிக்க வேண்டும் போலிருந்தது ஸிராஸாவுக்கு. ஆறு வருட அறுவடையாக அவளுக்கென்றொரு சங்கிலி கூட இல்லாதநிலை.

"இதுக்கெல்லம் இப்பிடி யோசிக்கத்தேவில்ல புள்ள. பாஸ்போட்டத் தேடிவெய். நாளக்கி கொணுபோறதுக்கு-" முத்தாய்ப்பாக தனது முடிவைத்திணித்துவிட்டு ஜமால்நானா வெளியே பாய்ந்தார்.

ஸிராஸா ஏக்கத்தோடு எழுந்தாள்.

****

அடுத்தநாள் காலை தனது பெட்டியைத் திறந்தபோது தேடவேண்டிய அவசியமிருக்கவில்லை. பளிச்சென்று பாஸ்போட் தெரிந்தது. ஒருமுறை புரட்டிப் பார்த்துவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டியின் அடியில் திணித்து திறப்பைப் பத்திரமாக நெஞ்சுக் குள்ளே வைத்துக்கொண்டாள்.

"மகேள் பாஸ்போட்ட தேடியெடுத்தா?" குளித்து தயா ராகிவிட்ட வாப்பாவின் குரலிது.

அவள் பதிலெதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்தாள்.

நேற்றிலிருந்து தாத்தாவும் முகத்தை திருப்பிக் கொண்டுதான் திரிந்தாள். குற்ற உணர்வு குத்தாதா என்ன?

"எனத்தியன் யோசிக்கிய?-" காம்பராவுக்கே வந்து விட்டார் வாப்பா.

"நான் இன்னம் கொஞ்சம் யோசிச்சிப் பாக்கோணும்"

"எனத்தியன்டீ யோசிச்சிப் பாக்கிய-" அவருக்கு கோபம் பொங்கிவிட்ட நிலை.

அவரையும் தள்ளிக்கொண்டு உள்ளே புகுந்தாள் உம்மா. முகத்திலே வெறிக்கோலம்.

"ஓ எனேத் தெரீம்.. ராவுபகலா ஒசக்கத்தூட்டுப் பொகச் செல்லே.. ஒன்டுமல்ல இப்பொனக்கு மாப்புளப் பெய்த்தியம் புடிச்சீக்கிய ..."- இது உம்மா மகளுக்குச் சொல்லும் வார்த்தைத் தீ.

அவளால் தாங்க முடியவில்லை. இரண்டு வார்த்தை கள் சொல்லாதிருக்கவும் இயலவில்லை.

"நான் சவூதிக்கு போறதான்.. எனேப்போற காலத்தேம் பாக்கோணுந்தான்....-"

அப்படியொரு வார்த்தை வீச்சு. இவளா இப்படிப் பேசுகிறாள் என்ற அளவுக்கு.

ஜமால் நானாவின் கண்கள் புரண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பீரமாகச் சுரந்து கொண்டிருந்த ஒரு குளிரூற்று, ஒரேயடியாக வற்றி வரண்டுவிட்டது போன்ற புலக்காட்சி.

**1994.10.17.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்டம்

சொப்பிங், பேக் பட்டென்று அறுந்து கொட்டிவிடும் அளவுக்கு உப்பியபடி மரக்கறி சாமான்கள் சகிதம் வந்தேறினான் ராஸிக்.

வீட்டு வேலைகள் ஏராளமாய்ச் செய்து அலுத்துச் சலித்து அப்பொழுதான் வந்தமர்ந்த ஜுவைரியா அக்கணத்திலேயே மீண்டும் உற்சாகமடைந்தாள்.

எங்கோ விளையாடிக்கொண்டிருந்த சின்னவன் ஆரவாரத்தோடு ஓடிவந்து துள்ளிக் குதித்து மகிழ்ந்தான்.

"பிளாஸ்கில தேத்தண்ணி வெச்சீக்கி குடீங்கொ"

கணவன் உள்ளே சென்றதும் பேக்கை தூக்கிக் கொண்டு குசுனிக்கு வந்து, கோணியை விரித்துப் போட்டுக் கொட்டினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தரிக்காய், வாழைக்காய், கரட், தக்காளி, வெங் காயம் இப்படி ஒரு கிழமைக்குப் போதுமான கறிகாய்கள் காணப்பட்டன. நெத்தலிக்கருவாடு, சமன் டின் வேறு. சீனி வாழைப்பழச்சீப்பைக் கண்டதும் சின்னவனுக்கு ஒன்றும் ஓட வில்லை. இரண்டு கைக்கும் இரண்டை இடுங்கிக் கொண்டு பழைய விளையாட்டுக்கு ஓடிவிட்டான்.

வழமையாக காலையில் வியாபாரத்துக்குச் செல்பவர், இன்று வெறுங்கையோடு எங்கே போகிறாரென்று அவளுக்குப் புரியவில்லை. அதற்கிடையில் கைநிறையச் சாமான்களோடு வந்து சேர்ந்தால் மகிழ்ச்சி பொங்காதா என்ன!

இரண்டு பெட்டிகளில் சாய்ப்புச் சாமான்கள் கொண்டு போய், பேமென்ட் யாவாரம்தான் அவனது ஜீவனோபாயம். ஒருவேளை தேநீர் குடித்து விட்டு புறப்படக்கூடுமென்று அவள் எதிர்பார்த்தாள்.

"பன்னெண்டு மணிக்கி வாரன். நேரத்தோட சோறாக்கி வெய்ங்கொ-" வாயைத் துடைத்தபடி வந்த ராஸிக் சொன்னான்.

"எனத்தியன் இன்டக்கி அவசரம்?"-அவள் பதில் கேள்வி எழுப்பினாள்.

"அதெனத்துக்கன் ஒங்களுக்கு. சாமனீக்கிதானே ஆக்கி வெய்ங்கொ-" அதற்குமேல் கதையை வளர்க்காமல் வெளி யிறங்கினான்.

அப்பொழுது பத்துமணி. சமையல் படலத்துக்கு உட னடியாக இறங்கினால்தான் சரி. வழமையாக பன்னிரண் டரைக்கு அவள் சமைத்துப் போடுவாள். இன்று ஒரு அரை மணித்தியாலமாவது அவசரப்படுத்தவேண்டுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமையலுக்குத் தேவையான அளவு கறிகாய்களை அள்ளிக்கொண்டுபோய் குசுனிக்குள் குந்தினாள்.

“எந்த நாளும் இப்பிடி ஊடுவாசல்ல சாமான் சட்டிந்தா எனக்கெவளவு லேசன். இல்லாட்டி கடக்கிப் பெகேம் வரேம். நேரம் கொஞ்சமும் பெய்த்திருகிய”

வாழைக்காயின் தோல் சீவியபடியே ஜுவைரியா சிந்தித்தாள். நெத்தோலி, வெங்காயம், மிளகாயெல்லாம் சட்டியில் ஊறிக்கொண்டிருந்தன. சோற்றுப் பானைக்கு விறகைத் திணித்து மேலும் ஊதிவிட்டாள்.

அதற்கிடையில் அலுமினியம் குடம் காலியாகிவிட்டது. ஒரு குடம் நீரையாவது கொண்டு வந்து ஊற்ற அவளுக்கு யாரும் உதவிக்கில்லை. குடத்தைத் தூக்கிக்கொண்டு கதவை அடைத்துவிட்டு வெளியிறங்கினாள்.

அடுத்த வீட்டுக் கிணறுதான். அவள் போகும்போதே அங்கே இன்னும் இரண்டுபேர் நின்றார்கள். அவர்கள் அள்ளிக்கொள்ளும் வரை காத்திருக்க வேண்டாமா?

“ஹோவ்....”- என்றெழுந்த சத்தம் அவள் பார்வையை அதற்கடுத்த வீட்டுக்குள் ஈர்த்தது. விரிந்த முற்றமுள்ள பெரிய வீடு. வீட்டுக்குள் சனங்கள் நிறைந்திருப்பதுபோல் தெரிந்தது. அப்படியொரு விசேடமும் அங்கே இருப்பதாக அவள் கேள்விப்படவுமில்லை.

“எனத்தியன் ஹபிதாத்தா சனம்?-” அவள்தான் கேட்டாள்.

“மெச்சாம்.. தாராலும் போலயடிக்கிய இவனியளுக்கு இருப்பிடமில்ல.. கொஞ்சம் நாளக்கொருக்க இந்தக் கூத்துத் தான்-” வாளியை ஜுவைரியாவிடம் கையளித்தபடியே ஹபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்தா சொன்னாள்.

பட்டென்று அவளுக்கு எல்லாமே புரிந்து போய்விட்டது.

"மெய்தான் மெய்தான் தீன் தண்ணில்லாம டீவீக்குள்ள பூந்துக்கோ நிப்பானியள்-" அவளும் கொஞ்சம் கக்கி வைத்தாள்.

ராசிக் நானாவும் ஒரு பெரிய கிரிக்கட் ரசிகன். சின்னக் காலத்தில் மட்டபோல் அடித்ததை தவிர அவருக்கும் விளை யாட்டுக்கும் எந்த சம்பந்தமுமில்லை. டீவீயில் கிரிக்கட் தொடர் ஆரம்பித்தால் இனிக் கேட்கத் தேவையில்லை. உலகத்தையே அவர் மறந்து போய்விடுவார்.

அப்படிப்பட்ட ஒரு நாளில் ....

"இந்த மாதிரி நீங்க மெச் பாத்துக்கொண்டு திரிஞ்சா தொழில் தொறவுக்குப் போறல்லியா-" பொறுக்க முடியாத ஒரு நிலையில் ஜுவைரியா கேட்டாள்.

"ரெணுமூணு நாளக்கித்தானே மெச்.. எந்த நாளுமீக்கியா-" அவனது பதில்.

"சல்லி சாமான் உள்ளவங்களுக்கு குத்தமில்ல.. எங் களப் போல அன்டயன்டக்கி காலம் போறவங்க பசீலீக்கியா..."

"வருஷக் கணக்கா ஒன்னப் பசீல போட்ட மாதிரியேன் பேசிய"

"ஆ.. பேசப் போனா ஒங்களுக்கு கோவம் போற.. இன்டப் பகலக்கும் பெரியும்மாகிட்ட ஒரு சுண்டு அரிசெடுத்துத் தான் ஆக்கின-" இப்படி இரைந்து விட்டு பட்டென்று எழுந்தாள் ஜுவைரியா.

அதன் விளைவுதான் இன்றைய சாமான் பேக் என்பதை நினைத்தபடி, சுமந்து வந்த குடத்தை வைத்தாள் அவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பசிக்குதும்மா"-விளையாடிவிட்டு வந்த சின்னவன் கத்தினான்.

"ஒனக்கும் ஒன்ட வாப்பாக்கும் டைமுக்கு பசியென்டா வார" அவன் எதுவும் புரியாமல் கண்களைப் புரட்டினான்.

****

காதைப் பிளக்குமாப்போல் பட்டாசுவெடி முழக்கம். மெச் தொடங்கி இன்று ஐந்தாவது நாள்.

ஜுவைரியா வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்து காதைக் கூர்மையாக்கிக் கேட்டாள்.

பள்ளியடியிலிருந்து சத்தம் வந்தால் பாகிஸ்தான் வெற்றியென்றும், பின்பக்க பால்வத்தயிலிருந்து வெடிகேட்டால் சிறீலங்கா வெற்றியென்பதையும் அவள் தெரிந்து வைத்திருந்தாள்.

பள்ளியடியிலிருந்துதான் வெடிச்சத்தம் அகோரமாக ஒலித்தது. தூரத்தூர இருந்தும் இடைவிட்டு ஒலிக்காமலில்லை. கூட்டம் கலைந்து வெளியே வருவதுபோல் பலபுறமிருந்தும் கூட்டம் கூட்டமாக சத்தமிட்டபடி சனங்கள் பாதைக்கிறங்கினர்.

"உம்மா எனத்தியனும்மா"- சின்னவன் வித்தியாசமுணர்ந்து விசாரித்தான்.

"ஓங்கட வாப்பக்கு இன்டக்கி பெருநாள்"

"பெருநாள்.. ஹோ..ஹோ.."- அவன் துள்ளிக் கொண்டோடினான்.

ராஸிக் மெச் காலத்தில் முற்றுமுழுதாக ஒரு பாகிஸ்தான்காரனாகவே மாறிவிடுவான். ஒரு முறை பாகிஸ்தான் டீம் இலங்கை வந்திருந்தபோது ஆயிரம் ரூபா கடன்பட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுபோய் இம்ரான்கானின் கையைக் கொஞ்சம் பிடித் ததை எவ்வளவு பெருமையாகப் பேசுகிறான்.

"ஜுவைரி தாத்தா .. ஒங்கட ராஸிக் நான ஆயிரம் ரூவ வெத்தி-" அடுத்த தெரு ஸல்மான் போகிற போக்கில் சொல்லிக் கொண்டு போனான்.

"ஆயிரம் ரூவ வெத்தியா?-" அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. கொஞ்சம் கொஞ்சம் புரியவும் ஆரம்பித்தது.

"இதென்ன அநியாயமன். தொழில் தொறவுக்குப் பொகாம பாவத்த தேடிக்கொளுகிய வேல"- அவளுக்குள் கோபம் பொங்கி நின்றது. அசந்துபோய் அமர்ந்துவிட்டாள்.

"ஜுவைரியா... பாகிஸ்தான் வெத்தி-" மகிழ்ச்சியை மனைவியுடனும் பங்குகொள்ள ஓடோடி வந்திருந்தான்.

"பாகிஸ்தான் மட்டுமல்ல நீங்களும் வெத்தியாம்-" அவன் எதிர்பாராத ஓர் இடி.

"அது சும்ம தெரியவா"

"தேடிக்கோங்கொ.. பாவத்த தேடிக்கோங்க"

"இங்க பாருங்கொ...லாபிர்ஹாஜி பத்தாயிரம் வெத்தி. இது சின்னக் கணக்கேன்-" சமாளிக்கப் பார்த்தான்.

"இந்த ஹாஜிமாரியள் எங்கட வழிகாட்டியல்ல.. ஒட்டுப் புடிக்கியதும் சூதுதான்."

"வரவர ஓன்ட வாய் மோசமாகிக்கொண்டு வார-" கோபத்தில் கெம்பியெழுந்து கைநீட்டி அதட்டினான்.

"ஒங்களுக்கு கோவம் போனத்துக்கு நான் பயமில்ல.. அந்த ஹராத்த எங்களுக்கு சேத்த வாண-" மகனையும் இழுத்துக் கொண்டு உள்ளே விரைந்தாள் ஜுவைரியா.

1994.12.28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகள் :-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறிப்புகள் :-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திக்குவல்லை கமால் கிராம வாழ்வின் பல்வேறு முகங்களையும். அதன் அடித்தள இயல்புகளையும் மிக யதார்த்தமாகச் சித்தரிக்கின்றார். ஒரு நுட்பமான ஓவியனின் தூரிகை போல கிராமத்தின் இயற்கை அழகையும். மக்களையும் கமாலின் பேனா. வசீகரத்துடன் உயிரோவியமாக ஆக்கியிருக்கிறது. பாசாங்கற்ற கதைசொல்லும் முறையில் நேர்த்தியான கலையம்சம் வனப்புறக் கலந்திருக்கிறது. எந்த நெருடலுமற்ற செய்நேர்த்தி. வாசகனை கமாலின் கதைகளோடு நெருங்கி வரச்செய்கிறது.

- செ. யோகநாதன்

ISBN 955-95926-0-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org